புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

ஸ்தாபிதம் (1889) [illegible]

இந்து சாதனம்.

THE HINDU ORGAN.

['ரெலிபோன்' இல. 56.]

பத்திரிகை விகிதம்.
யாழ்ப்பாணப் பட்டினம்: ஆண்டு 1-க்கு ரூ. 5-00
இலங்கை, இந்தியா: " ரூ. 8-00
தொலைதேசப்பகுதி: " ரூ. 9.00
தனிப்பிரதி: சதம் 5
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவைகேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்"

விளம்பர விகிதம்.
முதன் முறைக்கு:—ஒருகலம் ரூ 10-00
" அரைக்கலம் ரூ. 5-00
" கால்கலம் ரூ. 3-00
அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பணம் அனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—சக } யாழ்ப்பாணம்;-பிரசோற்பத்தி ௵ ஆவணி௴ உ௫௳, (1931 செப்டெம்பர் 10௳) வியாழக்கிழமை. { இலக்கம்—உ0.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
செம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பரோச் தாங்கப்
பேர்பூத்த வொளகத்தத் திணிது ளங்கப்
கிறைபூத்த சடைமுடிப் பிரானுர் தந்த
[illegible]
தம்பூத்த விநாயகன்றன் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தங்க மெடல்கள் பெற்ற
ஐரோப்பிய மதுரைக் கம்பனியாரால்
செய்யப்பட்டு,
திறமான குடை அடையாளமுள்ள

கொழுக்கி ஓடுகள்.

மதுரைக் கம்பனியார் சிறந்த குடை அடையாளமிட்டு [illegible]த்த ஓடுகளை வெகு பணிக்காய் அமைத்திருக்கிறார்கள் வெயில், மழை, செருப்புக்கு இதிலும் மேலான பாதுகாப்பு உபகரணம் வேறொன்றில்லை. பல தொழில் நிபுணரின் பரிசோதனைகளால் இதன் இலக்கை மெச்சப்பட்டது இதுவரை 10 தங்க மெடல் பரிசுக்குக் கம்பனியாரைத் தகுதியுடையவராக்கிப் புகழ்பெற்றது மிக இலேசானது மலிவானது ஒவ்வொரு ஓட்டிலும் குடை அடையாளம் விளங்கும். காங்கேசன்துறையிலே கலமாகக் கட்டப்படும் அரசினரின் சுகஸ்தான கட்டடங்களுக்கென இக்குடை அடையாளமுள்ள 55,000 ஓடுகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன

இந்த இனத்திலே கண்ணாடி ஓடுகளுமுண்டு

ஜே. செருபிம் அன்ட் பிறதர்,
ஏஜண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.
(Y 9 8 1—31 12 31.)

ஸ்ரீகதிரைமலைத் திருப்பணி.

கலிவிருத்தம்.

திருமலிந்திடு தென்னிலங்கையின்
மருவுசண்முகன் மலையினன்பணி
புரியவேசிறு பொருள்கள்வேண்டுநீர்
அருளியாங்கவனருள் பெற்றுய்ம்மினே.

தருமசீலர்களே!

உலகிலுள்ள எவ்வகை ஆத்மாக்களுக்கும் தம்முடைய அருட்செல்வத்தை வரையாது கொடுக்கும் வள்ளலாகிய ஆறுமுகப் பெருமான் கோவில் கொண்டருளிய ஸ்ரீகதிரைமலையிலமைந்திருக்கும் விவேகானந்த மடத்தில் தாகமுற்றடைந்தோர்க்குத் தாக சாந்தி செய்விக்கப்பட்டு வருகிறது. அன்றியும் முன்னே அம்மலைக்குச் செல்வோர்க்கு அதிக கஷ்டத்தை விளைத்த சுற்று வழிகளை நீக்கி இப்போ அதிக சமீபமாகிய வழியைத் திறந்து தாம்நிறைப்பது படி வரையில் பல பெரியோர்களது முயற்சியினாலும், சிவியோபகார சகாயத்தாலும் செவ்வனே கருங்கற் கட்டிடமாய்க் கட்டப்பெற்றுள்ளது. எஞ்சிய கருங்கற் கட்டிடத் திருப்பணியை முற்றுவித்தற்கு இப்போது பொருளுதவி வேண்டும். ஆகையால் பணம் அனுப்புவோர், தெளிவாகத் தங்கள் விலாசத்தை யெழுதி கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:—R. சிந்தாமணி அவர்கள்,
கச்சேரி யாழ்ப்பாணம்,
மேற்பார்த்து ராவண சந்த சாது வசம்
கொடுப்பது.
(H. Y. 9. 8-6&7 12-31)

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை நான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உங்களுக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி விசேஷ சனத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, ஜாவித்திரி, கஸ்தூரி, குமாஸ்தாகா, பூநாகு, சாலாமுஸ்லி, சப்பேமுஸ்லி, பிஸ்தாபருப்பு, சாரப்பருப்பு, பாதாம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, ஜாதிப்பூ வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டிகரமான மூலிகைகளைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனுல் வீரியவிர்த்தி, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, இருமலுடன் உண்டாயிருக்கும் பக்கவாய்வு; இருமல், காசம் சித்தசாமாலை, சித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடினமான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, கெர்ப்ப அறையில் உண்டாகும் ரோகங்கள் நீங்கி தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள் பால் விருத்தியுமாகும்.

இந்த லேகியத்தின் விலை ஒரு றாத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைறாத்தலுக்கு ரூபா க0. கால் றாத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

வெளியூர்களிலிருந்து முதலீடு தெரிவிப்பவர்களுக்கு வி. பி. சட்டம் இல்லாதபடியால் முன்பணம் ஆட்டர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சைதாளை ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்து,
மட்டக்களப்பு,
சிலோன்.
(Y 75. 31-12-31.)

ஸ்ரீ கதிர்காமம் கதிரமலைத் தண்ணீர்ப்பந்தர்த் திருப்பணித் தர்மம்.

கதிரைமலை கடைமலையிலுள்ள முத்துமாணிக்க விநாயகப் பெருமான் உத்தரவு பெற்று வருஷா வருஷம் பக்தகோடி அடியார்கள் பொருளுதவியால் நடந்தேறிவருகிற டெ தண்ணீர்ப்பந்தல் மேன்மேலும் நடந்தோங்கிவருவதற்குப் பெரும்பொருள் வேண்டும்.

இத்தருமம் நிறைவேறும் பொருட்டு கனதனவான்களாகிய சகலபுண்ணியசீலர்களும் தங்கள் தங்களால் இயன்றளவு பொருளுதவி செய்யும்படி வேண்டிக் கொள்ளுகின்றேன்.

உதவும் பணத்தை அனுப்பும் விபரம்:—

யாழ்ப்பாணம் நீர்வேலிப்பற்றுமணியம், வேலணை ஸ்ரீ மு. சோமசுந்தரம்பிள்ளை அவர்களிடம் அனுப்பவும்.

முத்துமாணிக்க வேல்சாமிசீடனுகிய சி. வீரவாகுப்பிள்ளை குமாரன்
வீ. ஆ. துரைசாமிப் பரதேசியர், கதிரைமலை
(Y. 16 9-7—8-7-32)

Established 1909 A. S. M. A. Khader Brothers

மருந்தேயாயினும் விருந்தோடுண், என்ற ஔவைப்பிராட்டியாருரைப்படி
இந்த விளம்பர முழுதும் தாங்களும் வாசித்து
தங்கள் சிநேகிதர்களுக்கும் வாசித்துக் காண்பியுங்கள்.
குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக்கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

மாறுபாடில்லாதவுண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடில்லையுயிர்க்கு. (குறள்.)

தன்னுடைய சர்வாங்கமாகிய சரீரம் [illegible] மூலசாத்தோஷத்தாலும் பிணிவராதளவில் தடுப்பதற்காகிய நல்லசிறந்த ஆகிய அமிழ்தங்களை உண்டவர்களுக்கு பிணிகளால் துன்பமில்லையென திருவள்ளுவநாயனார் கூறிய திருக்குறளைபுணர்ந்த அறிவிற்சிறந்த அன்புடையோரே அருந்தக்கடவீர்களாக.

நாகங் கெட்ட தேகத்தைக் காக்கும்; நாட்பட்டரோகத்தைப் போக்கும்.
உங்கள் பணத்திற்கும் மருந்தின் குணத்திற்கும் உத்தரவாதமளிக்கப்பட்டது.
சிறந்தது! குணமுற்றது!! மகிழ்வுற்றது!!! புகழ்பெற்றது!!!!

ஜீவானர்த்த தாது விர்த்தி லேகியம்.

ஓ! அன்பர்காள்!! ஒருவனுக்கு வீரியத்தில் ஏதேனும் விகற்பமுண்டாயிருக்கின் அவர் எவ்வித சர்வ தோஷத்திற்குரியவனாயினும் வீரியக்கெடுதலின் காரணத்தமாகவே அவன் மனதிற்கு மேலும் மேலும் விசனத்தை [illegible] உண்டாக்கச்செய்யுமென்பது ஆயுர்வேத சாஸ்திரங்களின் துணிபுந் தவிர, இராஜாங்க வைத்தியர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். அதுவே, சுபுலகம், அல்லது பேடித்தனமென்று சொல்லப்படும் அவ்விதஅசௌகரியமான கொடிய வியாதியை அடியோடு தொலைத்து உலகின் வாழ்க்கையில் என்றும் காணாத ஆனந்த சுகாநுபவின்பத்தையடையச் செய்விப்பதில் இந்த ஜீவானர்த்த தாது விர்த்தி லேகியமே மிகவுஞ் சிறந்தது. இந்த லேகியத்தின் முக்கிய குணமாவது: இளமைப் பருவத்தில் பற்பல துர்ச்செய்கைகளினுல் சுபிப்பிராயத்தில் [illegible] இரத்தங் கெட்டுப்போய் சந்தானவிர்த்தியில்லாமல் உயோதிகர்போல் [illegible] புருஷர்களும், வாதாதி மூவகை தோஷத்தால் உஷ்ணமுண்டாகி பிரமேகச்சூட்டால் [illegible] போல் நீற்று, வைகாலசதி மலசிக்கல், பசியில்லாமை ஜீரணக்குறைவு, [illegible], தாதுஸ்கலிதம், மூளையின்கொதிப்பு கண்ணெரிவு, தேக அனல் இடுப்புவலி நீர்க்கடுப்பு, நீர்எரிச்சல், நீர்சுருக்கு முதலிய சர்வரோகங்களையும், நோய்க்குத் தக்கபடி 40, அல்லது 20 நாளில் பூரணமாய் சுகப்படுத்தி, இரத்தத்தை சுத்திசெய்து நல்ல [illegible] மேலான வீரியத்தையும், மனவுற்சாகத்தையும் உண்டாக்கி, இரத்தவிர்த்தி, [illegible] அறிவுவிர்த்தி, தேகசகதி, சந்தானவிர்த்தி, முதலிய நலன்களை செய்வதில் இது [illegible] பொதுவாய் உறுதியாகச் சொல்லுகின்றோம். அப்படி இதில் [illegible] காட்டியுள்ள குணங்களுக்கு மேற்கொண்ட பலனையடையவில்லையென்று [illegible] பொதுவாய் சொல்லுகிறவர்களின்பணத்தை உடனே வாபீஸ் செய்விக்கப்படும். அப்படி [illegible] தவறினுல் கோர்ட்டுமூலமாக வசூல் செய்து கொள்ளலாம் மேலும் இம்மருந்தின் குணங்களைப்பற்றிச் சந்தேகிக்கிறவர்கள், நமது மருந்தாலயத்திற்கு நேரில்வந்து [illegible] சந்தேகத்தை போதுமானவரையுமுள்ள [illegible] செய்துகொண்டு வாங்கலாமென்பதை [illegible] கூறுகின்றோம்.

40 நாள் 80 வேளை டப்பி 1க்கு கிரயம் ரூ 8 0 0
பரீட்சிக்க 20 நாள் 40 வேளை டப்பி 1க்கு ரூ 4 0 0

வி பி தபால் சார்ஜ் பிரத்தியேகம், முற்பணமனுப்பினுல் வி. பி. தபால் செலவு இனமாய் அனுப்பப்படும். பினாங்கு, சிங்கப்பூர், சிலோன், சிறுபான், கோலாலம்பூர் ஆகிய ஐக்கிய மலாய் நாட்டு வாசர்களும் மருந்தின்கிரயமும் தபால் செலவு ரூ 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்தை பெறவேண்டும். டை பிறதேசவாசர்கள் அட்வான்ஸ் அனுப்பினுல், பாக்கி தொகைக்கும் வி. பி. யில் அனுப்புவோம். ஆர்டர் செய்பவர்கள் இப்பத்திரிகையின் பெயரை குறிப்பிட்டெழுதவும்.

Our Sole Agent;
P. M. Abdulcader Esqs,
Ceylon Post Agency
No. 105, Piachaud's Lane Maradana,
Colombo, Ceylon.

எமது விலாசம்:
☞ ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைதுல் முஸ்லிமீன் மெடிக்கல் ஹால்
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா,
இந்தியா.

(Y. 15. 6-7-31—5-7-32.)

இந்துசாதனம்

யாழ்ப்பாணம்: பிரசோற்பத்தி௵ ஆவணி௴ ௨௰௫ வியாழக்கிழமை.

எதற்கும் அரசினரை நம்பியிருத்தல்.

நமது நாட்டிலுள்ளவர்கள் தாம் சிறிது விசேஷமாக எந்தக் கருமத்தைச் செய்யப் புகினும் உடனே அரசினருடைய உதவியைப் பெறுவதற்கு ஓடிப்போகின்றார்கள். அரசினர் உதவி செய்யாவிட்டால் நம்மவர்கள் பெரிதுந் தைரியவீனமடைந்து தாம் செய்ய நினைத்த கருமத்தையும் சிற்சில சமையங்களிற் செய்யவியலாமல் விட்டுவிடுகிறார்கள். ஊரிலே களவு நடந்தால் அதனைத் தடுப்பதற்கும் திருடரைப் பிடிப்பதற்கும் பொலீசர்தான் வேண்டுமாம். ஏதும் சிறு கலகம் நடந்துவிட்டால் அதனைத் தடுப்பதற்கும், சமாதானப்படுத்துவதற்கும் பொலீசாதான் வேணுமாம். ஒரு கூட்டம் வெளியான இடத்தில் நடக்கவேண்டுமானால் பொலீசர் வேண்டும். கல்யாணப் பவனி, காவடி, அந்தியேட்டி முதலிய கருமங்கள் விஷயமாகத் தெருவீதிவழியே செல்ல நேர்ந்தாலும் பாதுகாப்போடு செல்வதற்குப் பொலீசர்தான் உடன்வர வேண்டுமாம். அயல் வீட்டுப் பெண்களிருவர் மனஸ்தாபப்பட்டுப்பெலத்து ஏசினாற் பேசினால் அந்த இடத்திலும் பொலிஸ், இல்லையேல் தலைமைக்காரன் வேண்டுமாம். பெரியமனுஷர்களை யடைந்து அவர்கள் மூலமாக இவ்விதமான பிணக்குகளையும் விவகாரங்களையுந் தீர்த்துக்கொள்ளும் பழைய முறை இப்பொழுது அருகிவிட்டது. இனி இப்படித் தீர்ப்பதற்கு இக்காலத்தில் உண்மையான பெரிய மனுஷரைக் காண்டல் அரிதென்பதையும் நாம் மறுக்கத் துணிந்திலேம். ஆனாலும் நம்மவர்கள் வர வர அரசினர் உதவியையும் நீதிஸ்தல மூலமாக வியாச்சியங்களைத் தீர்ப்பதையுமே பெரிதும் வேண்டி நிற்கின்றனரென்பது எவருமறிந்த இரகசியம். இவைகளுக்கெல்லாம் காரணம் வேறொன்றுமல்ல. ஏறக்குறைய 250 வருட காலமாக நம்மனோர் அந்நிய அரசினருக்குச் சந்ததி சந்ததியாக அடிமைகளாயிருந்துவருதலேயாம்.

நமது அயலவர்களாகிய சிங்களர் தமிழ் மக்களாகிய எங்களைப்போல அற்ப விஷயத்திற்கு அரசினரை நம்பியிருப்பதில்லை. காரணம், அவர்கள் ஏறக்குறைய 115 வருடங்களாகத்தான் அந்நியருக்கு அடிமைகளாயினர். வருடந்தோறும் அநுராசபுரத்தில் நடைபெறும் வெள்ளரசுத் திருநாளிலே கூடுஞ் சனக்கூட்டமே இலங்கையிலுள்ள சனக்கூட்டங்களெல்லாவற்றுள்ளும் மிகவும் பெரிய கூட்டமெனத்தக்கது. இலங்கையிலுள்ள பௌத்தருள் நூற்றுக்கு ஐம்பது விகிதமானோர் இத்திருநாட்காலத்தில் அநுராசபுரத்தில் வந்து கூடக் காணப்படுவர். இக்கூட்டத்தில் ஏதும் அக்கிரமம் நேருமேல் இலங்கை முழுவதுமுள்ள பொலிசர்தானும் வந்து இக்கூட்டத்தை அடக்குதல் முடியுமோவென்பது சந்தேகம். ஆனால், இந்த மகாகூட்டத்தை நேரே எப்போதாயினும் தரிசித்தவர்களே பௌத்த சமயத்தவர்கள் இத்திருநாட்காலங்களில் நடந்துகொள்ளும் ஒதுக்க பதுக்கமான முறையையும், பக்தித் திறமையையும், கிரமத்தையும், எல்லாரையும் பக்தர்கள்போல் மதிக்குந் தன்மையையும், இன்னபிற நலங்களையும் அறிந்து அற்புதமடைவர். சனக்கூட்டத்திற் தவறிய பொருட்கள், ஆபரணங்கள், பணப்பைகள் முதலியவைகளெல்லாம் அடுத்தநாள் புதைரதஸ்தானத்திற் சொந்தக்காரரைத் தேடிக் கண்டுபிடித்துக் கொடுக்கும்படி கொண்டுவரப்படுமானால், களவைப்பற்றி நாம் கனவிலும் நினைக்க முடியுமா? சாது, சாது என்ற சொல்லே யல்லாமல் வேறு வார்த்தையைக் கேட்டலரிது. இலட்சக்கணக்கானோர் கூடிய இக்கூட்டத்தில் வன்சொற் கேட்கப்படாது, மதுபானத்தின் மணந்தானுமில்லை, ஒருவரை யொருவர் முட்டிக்கொள்ளாமல் முட்டிக்கொள்ள நேர்ந்தாற் "சாது" எனச் சொல்லிவிட்டு ஒதுங்கிச் செல்வர். ஆனால் இங்கே பொலிசருக்கு எவ்வகையான கருமமுமில்லை. பொலிசரைக் காண்டலும் அபூர்வமெனலாம். இப்படியே கண்டியில் நிகழும் "பெரேகரா" உற்சவத்திலுங் காணலாகும். இதுவன்றோ பெருந்தன்மை; இதுவன்றோ தெய்வபக்தி; இதுவன்றோ ஒழுக்கம்; இதுவன்றோ மனத்திடமும், தம்மிடத்துத் தாம் நம்பிக்கைவைத்து நடத்தலுமாகும். இதுவன்றோ இங்குள்ள தமிழ் மக்களாகிய எங்களாலும் ஆவசியகம் பின்பற்றவேண்டியது.

இப்பொழுது நிகழும் நல்லூர்க்கந்தசுவாமி கோவில் மகோற்சவத்திலும் ஏனைய கோயில்களில் நிகழும் உற்சவத்திலும் சனக்கூட்ட விஷயமாக நாங்கள் பௌத்தமதத்தினர் கொண்டுள்ள இந்தமேலான முறையைக் கைக்கொண்டாலென்னை? பொலிஸ்பகுதியாரும் வடமாகாணத் தலைவரும் இந்த விஷயமாக எங்களைக் கைவிட்டனரென வைத்துக்கொள்வோம். இதற்காக நாங்கள் செய்யவேண்டிய வந்தனை வழிபாட்டைச் செய்யாமல் விடுவதா? இல்லையேல் நல்லூர்க் கந்தர் தரிசனத்தைக் கைவிடுவதா? அன்றேல் நல்லூர்க்கந்தசுவாமியார் எங்களைக் கைவிடுவாரா? இவைகள் எதுவும் நிகழப்போவதில்லை.

நல்லூர்க் கந்தசுவாமிகோவிலுக்கு வருவோரெல்லாருஞ் சைவசமயத்தவர்கள்; பத்தியுடையவர்கள். நன்னோக்கத்தோடு வருபவர்கள்; இங்கு வியாபாரமார்க்கமாக வரும் இஸ்லாமானவர்கள் பௌத்தர்களுஞ் சமயபத்தியுடையவர்கள். ஆதலினால், இவர்கள் தாங்களாகவே யுணர்ந்து திருவீதிக்கூடாக எவ்விதமான அக்கிரமச் செயல்களையுஞ் செய்யப்போவதில்லை. அறியாமல் யாரும் ஏதும் கிரமவீனமான செயலைச் செய்யத் துணியாவண்ணம் வழிபாட்டிற்கு வரும் வாலிபர்களும் தேசியசங்கத்தார் வாலிபர் மகாநாட்டார்களும் ஒரேவகையான உடை தரித்துக்கொண்டு பொலிசருடைய கடமையைச்சமாதானத்தோடும் பத்திபூர்வமாகவும் செய்தல்வேண்டும்.

இப்படியான நோக்கத்தோடு சென்ற இரவு ஒருசபை கூட்டப்பட்டதென்றும், அச்சபையின்கண்ணே பல நிர்ணயங்கள் செய்யப்பட்டனவென்றும் பிந்தி அறியலானோம். அதன் வரலாற்றை இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்தில் வெளியிட்டுள்ளோம்.

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் உற்சவம்.

பொலிசாரின் அலட்சியம்.

சாத்வீக மறியலின் ஆரம்பம்.

"இன்று மத்தியானம் ஒரு மணிக்குமேல் 50 தொண்டர்கள் சேர்ந்து சாத்விக முறையில் நல்லூர்க் கந்தசாமி கோவில் வீதி வழியாகச் செல்லும் வண்டிப் போக்குவரவை மறியல் செய்வார்கள்" என்ற முடிவு நேற்றுச் சாயந்தரம் நல்லூர்க் கந்தசாமிகோவில் வீதியிலே அடியார்கள் யாவரும் கூடிய கூட்டத்திலே தீர்மானிக்கப்பட்டது. பிறக்டர் ஸ்ரீ க. சோமசுந்தரமவர்கள் அக்கிராசனம் வகித்தனர். இக் கூட்டத்திலே, பொலிசார் வழக்கமாகத் தெற்கு வீதியிலே குறுக்கே மரங்கள்வைத்துத் தடைபண்ணுவதை இவ்வருடத்திலே சொற்ப காலைக்கு முன்னே எடுத்து விட்டதற்கு என்ன செய்வது என்பது யோசிக்கப்பட்டது. இதைப்பற்றி மாகாண அரசாட்சித் தலைவருக்கு அறிவித்தமை பயன்தராது போயிற்று. அடியார்கள் பெருந்தொகையாக வீதியிற் கூடினர்.

போத்துக்கேசரும், பறங்கியரும் இலங்கையைவிட்டுப் போனபிற்பாடு இதுவரையில் இலங்கையிலே மார்க்கவிஷயமான நெருக்கடி அதிகாரவர்க்கத்தினரால் நடந்தது கிடையாது. பெரிய மனுஷர்களாயிருந்த 'டைக்துரை' துவைனக் துரைபோன்ற துரைமார் இந்து ஆலயங்களைக் கண்ணியப்படுத்தியும் அவைகளில் நடைபெறும் திருவிழா முதலியவைகளுக்கு பெரும் உதவி புரிந்ததாகவுஞ் சொல்லப்படுகின்றது. ஆனால் இப்போது எமது சமயத்திற்குக் கண்ணியம் கொடுப்பது கிடையாது. கோவில்களையும் மதிப்பது குறைவுறுகின்றது.

இப்போது கொஞ்சக்காலமாக இக்கோவிலின் தெற்கு வீதியில் மரம்போட்டு மறித்து, வண்டிப்போக்குவரவைத் தடுத்ததை நீங்கள் அறிவீர்கள். இது பக்த கோடிகளின் வசதிக்காகச் செய்யப்பட்டது. இந்த வருடம் அதிகாரிகள் அத்தடைமரங்களை அகற்றிவிட்டனர். வண்டிப்போக்குவரவை நடைபெற விட்டனர். அடியார்களை அவதிக்குள்ளாக்கிவிட்டனர். அரசாட்சித்தலைவருக்கு இதையெடுத்துக் காட்டியும், ஏதோ தனக்குமாத்திரம் தெரிந்த ஒரு நியாயப்பற்றி, பொலிசார் இப்படிச்செய்வதைத் அவர் தடாதுவிட்டனர்.

எமது பக்தியுணர்ச்சிக்கு மாறான விஷயத்தை அரசாட்சியார் செய்தால் அதை நாம் பார்த்துக்கொண்டு நித்திரைகொள்ளக்கூடாது. பக்தர்களுக்கு எவ்வித வசதியீனமும் எவராலும் நடவாது தடுப்பது எமது கடமையாகும். நாம் செய்யவேண்டிய வழி யொன்றைப்பற்றித் தீர்க்கமாகத் தீர்மானித்துக்கொள்ளவேண்டும் என அக்கிராசனர் கூறினர்.

பிறக்ரர் ஸ்ரீ தி. கே. சுப்பையா அவர்கள்:

சிவன்கோவிலதிகாரிகளின்மீது அக்கோவிற் கோபுரவாசலிலே சகடையை நிறுத்தியதற்குப்பொலிசார்வழக்குத்தொடர்ந்திருப்பதைப்பற்றியும், மாகாணத் தலைவர் அக்கோவிற் குருக்கள் சுற்றுப் பலி போடும்போது கடித் தெருவைப் பாவிக்கக்கூடாதெனக் குருக்களுக்கு உபதேசித்தமையைப்பற்றியும் சொல்லி, யாழ்ப்பாணத்தவர்கள் அரசாங்க சபையைப் பஹிஷ்காரஞ்செய்ததன்பின், அதிகாரவர்க்கத்தினர், தம் பிரதிநிதிகளை அனுப்பாத குறையை யாழ்ப்பாணத்தவர் உணருமாறு செய்யவேண்டுமென எண்ணினர்போலும். எந்த இடத்திலும் அரசாட்சித்தலைவர் இப்படியான உணர்ச்சியை உண்டாக்கப் பிரயத்தனப்படுகின்றனர். இவ்வித தந்திரங்களினால் யாழ்ப்பாணம் எடுபடமாட்டாது. இப்பொழுது எம்மை அறைகூவி அரசாட்சியார் வலிவதை நாம் ஏற்றுக்கொண்டு எங்கள் சமயத்தில் சேட்டைபண்ணும் வழக்கத்தை அடியோடு நிறுத்திவிடுவதற்குப் போராடவேணும். ஒவ்வொரு சந்திகளிலும் வண்டிப்போக்குவரவை சாத்விகமாக மறியல் செய்தல்வேண்டும். யாராவது தெருப் பாவிப்புத் தாந்தான் வேண்டுமென்று உறுத்திநின்றால் அந்தவண்டிக்கு முன்பதாக விழுந்து கிடக்கவேண்டும். (பெலத்த கரகோஷம்) என்று கூறி முடித்தனர்.

பின்னர் அப்புக்காத்து ஸ்ரீ மா. ச. இளையதம்பிஅவர்களாற் பிரேரிக்கப்பட்டுச் சர்வாங்கீகாரம்பெற்ற பிரேரணை நிறைவேறியது.

தீர்மானம்: — சமாதானமான வழிவகைகளினால் வண்டிப் போக்குவரவைத் தடைசெய்வது.

இத்தீர்மானத்தைச் செய்கையிலே நிறைவேற்றுவதற்குத் தொண்டர்கள் வேண்டுமென்று இளையதம்பி அவர்கள் கூறினர். அவர் வாய்மூடுமுன் ஐம்பது தொண்டர்கள் முன்வந்தனர். இத்தொண்டர்கள் உடனே கூடி ஒரு அதிகார சபையை நிறுவினர்.

இவ்வதிகாரசபையிலே:—

ஸ்ரீ இ. சிவநூநாதர், பிறக்ரர், நடமாங்க அக்கிராசனர்.
,, வை. சி. சி. குமாரசுவாமி, பிறக்ரர், வர்த்தகர்.
,, மா. ச. இளையதம்பி, அப்புக்காத்.
,, தி. கே. சுப்பையா, பிறக்ரர்.
,, செ. மயில்வாகனம்
,, க. சிதம்பரநாதன்
,, க. சோமசுந்தரம்; பிறக்கிராசியார்

இவர் இச்சங்கத் தலைவராகவுந் தெரிவு செய்யப்பட்டனர்.

செ. மயில்வாகனமவர்கள் தொண்டர் படைத்தலைவராக நியமனம் பெற்றனர்.

பின்னர் இரவு 9 மணியளவில் இச்சங்கம் சங்க அக்கிராசனருடைய வாசஸ்தலத்திற் கூடிற்று. அப்பொழுது அரசாட்சியார், தேவாலயவணக்கஞ்சம்பந்தமாகச் சனங்களுடைய அபிப்பிராயத்திற்குமாறுசெய்வரேல் மறியல்தொடங்குவதென்றும் அப்படித்தொடங்குவது இன்று 1 மணிக்கென்றும் முடிவுசெய்யப்பட்டது.

தொண்டர்கள்கலைவுறுமுன்னர் படைத்தலைவர், சாத்விகமறியல் என்பது இன்னதென்பதைப்பற்றியும், எவ்வித இடர் எதிரிகளால் நடந்தபோதிலும் மிகக்கட்டுப்பாடாகச் சாத்விகமாகவும் பலாத்காரமற்றும் தொண்டர்கள் நடந்துகொள்ள வேண்டுமென்றும், இவ்வித சாத்விகசேவை செய்பவர்கள் சிறைச்சாலை செல்ல ஆயத்தமாயிருத்தல் வேண்டுமென்றும் கூறினர்.

மேலும் இதனால் ஏற்படும் பணச்செலவு முழுவதையும் ஒருசீமான் தருவதாக ஒப்புக்கொண்டிருக்கின்றனரென்றும் பகிரங்கப்படுத்தினர்.

ஆங்கில அரசரின் முன்மாதிரி.

இளவரசரின் தியாகம்.

இப்போது இங்கிலாந்திலேயுள்ள பணமுடி காரணமாக அரசாட்சி நிலைமையே கஷ்டப்படுவதை அரசர்பார்த்து தமது சொந்த உத்தியோகத்தரின் செலவாகும் 470000 பவுணில் 50000பவுணைக் குறைத்துவிட்டார். இப்படிக் குறைத்தமையினால் ஆங்கில அரசரே பெரும் வசதிக் குறைவுகளை அனுபவிக்க வேண்டியவராயிருக்கின்றனர். இனி வேல்ஸ் இளவரசர் தமது சொந்த வருமானத்திலிருந்து 10000 தங்கப்பவுண் அரசாட்சிப் பொக்கிஷத்திற்குக் கொடுக்கின்றனர்.

ஆங்கில அரசரும், அவருடைய அருமையான புத்திரனும் முடிக்குரிமையுடையவருமான இளவரசரும் தமது பணத்திலிருந்து தேச நன்மைக்காகக் கொடுக்க, இலங்கையிலே ஆங்கில உத்தியோகத்தர்கள் பிரயாணம் பண்ணும் வசதிக்காக, 50000 ரூபா சனங்கள் எடுக்க வேண்டாம் என்று கூறவும் அவர்களை அவமதித்துத் தேசாதிபதியால் எடுக்கப் பட்டது. ஆங்கில மன்னர்பிரானிலும் பார்க்க இலங்கைக்கு எம்மையெல்லாம் அரசு புரியுமாறு அனுப்பப்படும் ஆங்கிலர்கள் கொஞ்சமேனும் தங்கள் வசதியைக் குறைக்க முடியாத அத்துணைப் பெரியார் போலும். இங்கே மிடியடைபவர் இலங்கையர். அங்கே ஆங்கிலேயர்.

உலகம் பலவிதம்.

பணமுட்டு, தொழிலின்மை யென்ற இந்த அநர்த்தங்கள் காரணமாக உலகத்திலுள்ளவர்கள் கவலைகொண்டு இவற்றை நீக்குவதற்கு என்ன செய்யலாமென்று பல வழியாலும் யோசிக்க நமது யாழ்ப்பாணத்திலே நம்மவர்கள் மாத்திரம் இவைகளைப்பற்றிய யோசனை என்னளவுமில்லாமல், கள்ளை எப்படிக் குடிக்கலாமென்றே யோசிக்கிறார்கள். இந்த யோசனை வடமாகாணத் தலைவர்; வடமாகாணச் சனத்தலைவர்கள், மதுப்பகுதி உத்தியோகத்தலைவர்கள், தொழிலாளர் தலைவர்கள், தாழ்ந்தசாதிப் பிரதிநிதித் தலைவர் முதலாம் எல்லாத் தலைவர்களுடைய தலைகளிலும் புகுந்து தீராக்கவலையை யுண்டாக்கிவிட்டது. தவறணை வைத்துக் கள்ளைக்குடிப்பதோ, இல்லையேல் பனை மர வரி வைத்து வீடுகள் தோறுந் தவறணை வைத்துக் கள்ளுச் சேர்த்துக் குடிப்பதோ, இல்லையேல் பூர்வத்திலிருந்தபடி பிரியமானவர்கள் சேர்த்தும் சேர்ப்பித்துங் கள்ளுக்குடிப்பதோ, என்னவிதமாகக் கள்ளைக் குடிப்பது என்ற விஷயமே சென்றவாரம் யாழ்ப்பாணக் கச்சேரியிற் கூடிய மதுவிசாரசங்கத்தில் எடுத்துப் பிரதிபாதிக்கப்பட்டது. மதுபானத்தைத் தவிர்ப்பதாகிய நோக்கம் இவர்களெவரிடத்துமில்லை

* * *

இந்த மதுவிஷயமாக அக்கூட்டத்திலிருந்தவர்கள் சொன்ன அபிப்பிராயங்களோ பலவிதம். இதனைத்தான் உலகம் பலவிதம் என்று கூசாமற் சொல்லலாம். "வடமராட்சி தென்மராட்சிப் பகுதிகளிலுள்ளவர்கள் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்துக் கள்ளுச் சாராயத் தவறணைகளைத் திறப்பித்துக்கொண்டார்கள். ஆனபடியால் யாழ்ப்பாணப் பிரிவின் மேலைப் பாகத்திற்குப் பனைமர வரி வைத்துக் கள்ளைப் பெற்றுக் கொள்வதே புத்தியாகுமென்பது என்னுடைய அபிப்பிராயம்" என்று மாகாணத் தலைவர் வெளியிட்டார்.

* * *

"அது சரி, ஆனால் அந்நிய நாட்டுக் குடிவகைகளுக்கு என்ன சொல்லுகிறீர்கள்" என்று கேட்டார் ஸ்ரீ சு இராசரத்தினமவர்கள். "அதைப்பற்றி இப்போது கேட்கவேண்டாம்; இந்தக் கள்ளைப்பற்றி ஒரு முடிவு சொல்லுங்கள்" என்று விடையும் வினாவும் ஏககாலத்தில் நிகழ்த்தினார் மதுப் பகுதித் தலைமை உத்தியோகத்தராகிய மிஸ்ரர் ஹெக். "அந்நியநாட்டுக் குடிவகைகளை இங்கே வரவொட்டாமல் தடுக்கும் விஷயத்தில் அரசினரும் எங்களுடன் ஒத்துழைக்க வேண்டும்; இல்லையேல் நாம் செய்யக்கூடியதொன்றுமில்லை; அந்நிய குடிவகைகளைத் தடுக்க நாங்கள் முயன்றபோது, அரசினர் ஆறரை லட்சம் ரூபா செலவிட்டாற்றான் அதனைத் தடுக்க முடியுமென்று ஒரு பெருந் தடையிட்டுள்ளனர். ஆனதினால் அந்நிய குடிவகையை அரசினர் தடுக்கும் வரையில், தவறணைகள் மூலமாகக் குடித்தலாகும்" என ஸ்ரீ இராசரத்தினமவர்கள் கூறினர். மேலும், தவறணைகளாயிருந்தால் வேண்

சைவத்திருநெறித் தோத்திரத்திரட்டு

சைவசமயிகள் பாராயணஞ் செய்தற்கும், சைவவித்தியாசாலைகளிற் சமயபாடமாக உபயோகித்தற்கும் பயன்படும் வண்ணம் இத்தோத்திரத்திரட்டு நவமாகத் தொகுக்கப் பெற்றுள்ளது. இதன்கண் அகத்தியர் தேவாரத்திரட்டு (முழுவதும்) திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், பட்டினத்தடிகள் திருப்பாடல், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, தாயுமானவர்திருப்பாடல், முதலியன முறையே தொகுக்கப்பட்டுள்ளன. மேலும் விநாயகக்கடவுள், சிவபெருமான், நடராசர், தக்ஷிணாமூர்த்தி, வைரவக்கடவுள், வீரபத்திரக்கடவுள், சுப்பிரமணியக்கடவுள், அரிகரபுத்திரர், (ஐயனார்) சிவசத்தி, சிவகாமியம்மை, துர்க்கை, இலக்குமி, சரசுவதி, திருநந்திதேவர் முதலாம் மூர்த்திகளுக்கும், சமயகுரவர்க்கும் சூரியமூர்த்திக்கும், சண்டேசுவாருக்கும் உரிய தோத்திரங்கள் மரபாக வகுக்கப் பெற்றுள்ளன. இதனை ஒரு பூரணமான தோத்திரத்திரட்டெனச் சொல்லலாகும். 128 பக்கங்கள் வரையிற் கொண்டது. 470 அருட்பாக்களைக்கொண்டது சாதாரணகட்டு விலை சதம் 30 (அணு 5.) தடித்த மட்டையோடு கூடிய கட்டு சதம் 40. பிரதிகள் இந்துசாதன ஆலயத்திற் பெறற்பாலன. தபாற்செலவு வேறு.

வண்ணார்பண்ணை, இந்துசாதனலயம். } மனேஜர்.

கௌரவ: மக்கான் மரக்கார்மீது வழக்கு.

மட்டக்களப்பு அப்புக்காத்து மிஸ்டர்: E. R. தம்பிமுத்து, மந்திரி உத்தியோகத்தை வகித்திருக்கும் கௌரவ: மக்கான் மரக்கார்மீது குற்றச்சட்டம் 169 B பிரிவின்படி ஒருவழக்குத் தொடர்ந்திருக்கின்றார்.

சுப்பிறீம்கோட்டிலே பொய்ச்சாட்சி சொன்னதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட 4 முஸ்லிம்களுக்காக, பிறக்டர் காரியப்பர், மிஸ்டர் தம்பிமுத்துவை ஏற்படும்படி ரூ500 வேதனம்பேசி 100 ரூபா கொடுத்து வைத்திருந்தார். அந்த வழக்கு பொலிஸ்கோட்டிலேயல்லாமல் சுப்பிறீம்கோட்டிலேயே விளங்கப்படுவதாயிற்று. அக்காலத்தில் கௌரவ மக்கான்மரக்கார் அந்த முஸ்லிம்களுக்குக் கொழும்பிலிருந்து மிஸ்டர் R. S. S. குணவர்த்தன என்னும் அப்புக்காத்தை அழைப்பித்துக் கொடுத்தார். அதனால் மிஸ்டர் தம்பிமுத்துவுக்குப் பாக்கியாகக் கொடுபடவேண்டிய ரூபா 400 கொடுபடாமற் போனதுமன்றி, சுப்பிறீம் கோட்டு விளக்கமானதால் இன்னும் அதிகத்தொகை கிடைக்கக்கூடிய தருணமும் தட்டுப்பட்டது.

குறித்தமுறைப்பாட்டிற்குச் சாதகமாக பிறக்டர் காரியப்பரும், அப்புக்காத்து குணவர்த்தனவும் சாட்சி சொல்வார்களாம்.

குறித்த சாட்சிக்காரருக்கு இத்தமாதம் 11-ந்திகதிக்கு வரும்படி கட்டளை அனுப்பப்பெற்றிருக்கின்றது.

அரசாங்கசபைத் தெரிவு நடந்தகாலத்திலே இது நடந்ததெனவும் குறித்த 4 முஸ்லிம்களும் தமக்குச் சார்பானவர்களும் செல்வாக்குடையவர்களுமென மிஸ்டர் தம்பிமுத்து நீதிபதிக்குக் கூறியிருக்கின்றனர்.

பிறவிக் குருடன் பார்வை யடைந்தான்.

வார்சோ, 2-9-31.

மிஸ்கீஸ் என்னும் கிராமத்தில், ஆராதனைக்குச் சென்று திரும்பிவந்து பழத்தோட்டத்தில் விளையாடிக்கொண்டிருந்த ஒரு சிறு பையன் மேலேயிருந்து ஏதோ தனது தலையில் விழுந்ததாக உணர்ந்தனன் உடனே அவனுக்குக் கட்பார்வையுண்டாயது. அந்தக் கிராமத்திலுள்ளார் இது தெய்வச்செயலென உணருகின்றனர்.

வெளிவந்து விட்டது!

உலகம் பலவிதம்—௩;

துரைரத்தினம்—நேசமணி.

இதுகாறும் வெளிவந்தவற்றுள் இதுவே சிறந்த கதையாம். வாசிக்கவாசிக்கத் தெவிட்டாதது.

"கிளேஸ்" பதிப்பு பிரதி 1. விலைசதம் 60

"றவ்" " " " 50.

☞ஒரேமுறையில் 5 பிரதிகள் வாங்கினால் 1 பிரதி இனும்.

உலகம் பலவிதம்—௪;

கோபால—நேசரத்தினம், விலைசதம் 75.

உலகம் பலவிதம்—உ

காசிநாதன்—நேசமலர் விலை சதம் 30.

(M's 347)

திருவாதவூரடிகள்புராணம்:

ஆசிரியர்: ம. க. வேற்பிள்ளை அவாகளியற்றிய விருத்தியுரையுடன் ரூ. 1—75.

மேற்படி புராணம்:

பதவுரையுடன் மாணவர் பதிப்பு ரூ. 1—25.

வில்லி பாரதம்

இராசசூயச்சருக்கம்:

பதவுரை, கருத்துரை, விசேடவுரை, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன் 75 சதம்.

பிரதிகள் எம்மிடம்பெறற்பாலன.

ம. வே. திருஞானசம்பந்தன்,
வண்ணார்பண்ணை.

Pandit:
V. T Sambandhan,
Vannarponna'.

முதன் மந்திரி தனது வட்டாரத்தை அவமதிக்கிறார்.

லண்டன், 2-9-31.

முதன்மந்திரியாராகும் மிஸ்டர். மாக்டொனல்ட் 'சீகாம' என்னும் தமது தெரிவுரிமை வட்டாரப்பகுதியிலுள்ள தொழிற்கட்சியாருக்கு எழுதிய ஒரு கிருபத்தில் தாம் அப்பகுதிப் பிரதிநிதித்துவத்தைப் பரித்தியாகஞ் செய்ய எண்ணமாட்டேன் என்று கூறுகிறார் [இப்பகுதித் தொழிற்கட்சியார், கூட்டுறவு அரசாட்சியில் மிஸ்டர். மாக்டொனல்ட் பங்குபற்றக்கூடாதெனத் தெரிவித்திருக்கின்றனர். பர் இ-ம்] "இப்படியாகப் பரித்தியாகஞ் செய்வது, பிரித்தானியாவிலுள்ள பெருவாரியான கூலிச்சனங்களின்நன்மையைப் பாதுகாப்பதைக் கைவிடவேண்டியதாகின்றது" என்று கூறினர்.

ஆகையினால் தொழிற்கட்சியார் தன்னைச் செய்யும்படி கேட்கின்ற எந்த வேலையும் இப்போது தான் ஆரம்பித்துள்ள கடமையைமுடித்தபின்பேயன்றி அதற்கு முன் அல்ல என்று கூறியிருக்கின்றனர்.

இந்தியச் செய்தி.

*

கப்பலேறும்போது

பண்டிதர் மாளவியா கூறியதாவது:—

'அன்பாகவும் ஒற்றுமையாகவும் இருங்கள். நம்பிக்கையைக் கைவிடாதீர்கள். மனத்திடமாய் வாழுங்கள். சுயராச்சியம் அணுகிவிட்டது.'

'எங்களுடைய முயற்சி நீதியின்பாற்பட்டது. அதனைப்பெற நாங்கள் அனுட்டிக்கும் முறைகள் மிகவும் உன்னதமானவை சித்தியடைவேனென்ற முழு நம்பிக்கையுடன் நான் சொல்லக்கூடியது யாதெனில்:—நீங்கள் அஹிம்சையைக் கைக்கொண்டுசமாதானமாக வாழவேண்டுமென்பதே. இந்தியாவின் பற்பல வகுப்பினரும் ஒற்றுமையாய் வாழவேண்டும். சுயாராச்சியம் எங்களுடையபிறப்புரிமை. அதை நாம் பெறுவதைத் தடுக்க ஒருவருக்கும் உரித்தின்று. ஆனால் அது விரைவில் வந்து நம்மை அடையுமென்று துணிவாகக் கூறலாம்'

ஸ்ரீமதி: சரோஜினிதேவி கூறியதாவது:—

"இந்தியாவிலிருந்து லண்டனுக்குச் செல்லும் ஒவ்வொரு பிரதிநிதியும் இந்தியாவின் மானத்தையும், பெருமையையும் காப்பாற்றும்பொறுப்பையுடையர். உலகத்தில் யாராவது இதனை மறுக்கமாட்டார். ஆகையால் நாம் சித்தியடைவது திண்ணம். இந்தியாவின் பெருமையைக் காப்பாற்றுவதற்கு முதல் செய்யவேண்டியது இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும்இடையிலுள்ள வித்தியாசத்தை நீக்கவேண்டியது தான். அப்படிச் செய்யவேண்டின், நாம் இந்துக்களென்றும் மகமதியரென்றும் நம்மை மதியாது இந்தியாவின் விடுதலையில் அபேட்சைகொண்ட உண்மை இந்தியராக எண்ணவேண்டியதே."

மஹாத்மாவின் செய்திகள்.

ஏடின், 3-9-31.

"இராசபுத்தானு" புகைப் படகு இவ்விடத்தைவிட்டு 9மணிக்குப்புறப்பட்டது. இதற்குமுன் காந்தியார் ஓயாதவேலையுள்ளவராகக் காணப்பட்டனர்.

இரவு 12 மணிதொடக்கம் பெருந்தொகையான இந்தியர்கள் காந்தித்தொப்பி அணிந்துகொண்டு துறைமுகத்திலே கப்பலின்வரவை எதிர்நோக்கியவர்களாயினர். கப்பல் தோற்றப்பட்டவுடன் எல்லோரும் சந்தோஷ ஆர்ப்பரிப்புச் செய்தனர். கப்பலும் கரையோரமாகப் போய்ச் சேர்ந்தது.

காலை 5-30மணிக்கு ஸ்ரீமதி சரோஜினி தேவி ஸ்ரீமாக்: மாதவதேசாய் சகிதமாக காந்தியார் புகைவள்ளத்திலேறிக் கரையையடைந்தனர்.

அதிகாலையில் அங்கு உலவிய குளிர்ந்த காற்றை அநுகூலமாகக்கொண்டு அப்பட்டினத்தில் அநேக இடங்களை அவர் தரிசித்தனர். ஒவ்வொரு இடத்திலும் அவருக்குக் குதூகலமான வரவேற்பு நடைபெற்றது.

இவ்விடத்து இந்தியமக்கள் காந்தியாருக்கு ஒரு பெருவிருந்து நடத்துவதாக உத்தேசித்திருந்தனர். ஆனால் கப்பல் 12 மணிநேரம் பிந்திவந்தமையால் ஒரு வரவேற்புப்பத்திரத்தைமாத்திரம் சமர்ப்பிப்பதாக அவர்கள் முடிவெடுத்தனர். இந்த வரவேற்புப் பத்திரத்திலே காந்தியடிகளின் தலைமையை அங்கீகாரஞ் செய்திருக்கின்றனர். மேலும் காந்தியார், இதற்குமுன் உலகத்திலே அப்போதப்போது தோற்றும் ஜகத்குருமார்களுக்குச் சமதையானவரென்றும், வட்டமேசைச் சமாஜத்திலே அவருக்கு அநுகூலம் உண்டாகவேண்டுமென்றும அபிப்பிராய ஆசிகூறினர்.

இந்த நன்முயற்சியின்சார்பாக அவருக்கு அவர்கள் 325 பவுண்கொண்ட ஒரு கிழியையும் உதவினர்.

இதற்கு உத்தரம் கூறுகையில் அளிக்கப்பட்ட தொகை தமக்கு முழுத்திருப்தியைக் கொடுக்கவில்லையென்றும் தாம் ஏடினிலுள்ள வர்த்தகர்களிடம் பெருந்தொகையை எதிர்பார்த்திருந்தனர் என்றும் கூறினர்.

அங்கு குழுமியிருந்த சனங்களுக்கு குஜாரத்திபாஷையிலும ஆங்கிலத்திலும் பேசினார். இந்து-முஸ்லிம ஒற்றுமையின் அவசியத்தைப்பற்றிவற்புறுத்தினர். பின்னர் ஏடின் பட்டினத்தின் அரசாட்சித் தலைவரைச் சந்தித்துவிட்டு, வர்த்தகர்களுடன் பகற்போசன மருந்திக் கப்பலுக்குத் திரும்பினர்.

நவராத்திரி விரதாரம்பம்.

நம் சைவாபிமானிகளே!

இந்துசாதனம் 31-8-31-ல் வெளிவந்த பத்திரிகையில் 4-ம் பக்கத்தில் தென்னிந்திய சைவசித்தாந்தசங்கத்தாரால் வெளியிடப்பட்ட "நவராத்திரி நிர்ணயம்" என்றதைக் கண்டு மருளாதீர்! வெருளாதீர்!! அதிற் குறிக்கப்பட்ட ஆகமங்களில், சிங்கமாசத்தில் வரும் அமாவாஸ்யை கழிந்த பிரதமைத் தினத்தில் நவராத்திரி விரதாரம்பம் கொள்ளவேண்டுமென்று விதிக்கப்படவில்லை; ஆன்றோர் வழக்கமும் அப்படியில்லை. கன்னியாமாசத்து அமாவாஸ்யை கழிந்த பிரதமையும், ஆஸ்வீஜ சுத்தப் பிரதமையும் ஒன்றே. இதுவே நவராத்திரிவிரதாரம்பத்துக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. இப்பிரதமை தொடக்கம் தசமிவரையும், கன்னியாமாசத்தில் வருதலும், சிறுபான்மை துலாமாச முற்கூற்றிற் சமாப்தியாவதும் ஆகமசம்மதம். கன்னியாமாச சுக்கிலப் பிரதமை, சிங்கமாசத்தில் வருவது ஒருபோதும் இல்லை. இவ்வுண்மைகளை அவ்வவ் ஊர்களிலுள்ள அறிஞர்களிடத்திருக்கும் ஏடுகளிலேனும், புஸ்தகங்களிலேனும் பார்த்துக் கேட்டுத் தெளிந்துகொள்ளுதிர்.

"சௌரமாதங்களின் பெயர்கள் சைத்திரம் வைசாகம் முதலியன" என்று குறித்தபடி, அவர்களுக்கு ஆஸ்வீஜம் சௌரமாசப்படி ஐப்பசி என்றாகுமே. அப்படியாயின் இவர்கள் ஐப்பசி மாசத்து அமாவாஸ்யை கழிந்த பிரதமையிலன்றோ நவராத்திரியாரம்பம் கொள்ளவேண்டும். ஆதலால் அக்குதர்க்கத்தை நம்பாதீர்கள். எழுதுங்கால் நெடுக எழுதலாம். இவ்வாண்டில் கன்னியாமாச (புரட்டாதிமாச)ச் சுக்கிலபக்ஷப் பிரதமையிலன்றே நவராத்திரி விரதாரம்பம் கொள்ளவேண்டிய முறையைத் தவறுதீர்கள். இவ்விரதாரம்பத்திற்குப்பிரதமையேபிரதானம்.

சிவபிரானுக்குச்சிரசிலாபரணம்போல்விளங்கியும், ஒருதிருக்கண்ணுபமைந்தும், அஷ்டமூர்த்திகளுள் ஒரு மூர்த்தியாயும், சிவராவிரதங்களுட் சிறந்தவாராதிபனுகியும், ஞயிற்றுக்கடுத்த வாராதிபனுகியும் கௌரீதேவியைப் பிரத்தியதிதேவதையாகப்பெற்றும் இன்னோரன்ன சிறப்புவாய்ந்த சந்திரதேவனை உளம்போனவாறு எழுதித் தூஷித்தது என்ன விவேகம்! சிவாபதி சந்திரன் என்பதையும் நினைத்திலர்போதும்!!

கன்னியாமாச சுக்கிலப்பிரதமையாகிய ஆஸ்வீஜ சுக்கிலப்பிரதமையே தேவிவிரதாரம்பத்துக்குரித்தாதலை யினியேனு மாராய்ந்துணரக் கடவர்.

இக்கட்சியார் சென்ற ருதிரோற்காரிவர்ஷத்தில், நவராத்திரியாரம்பத்தை ஆஸ்வீஜ சுத்தப் பிரதமையிலும், நவமி விஜயதசமிகளை துலாமாச முற்பகுதியிலும் நிர்ணயித்ததையும், அவ்வாறு நடைபெற்றதையும் மறவாதார் அநேகருளர். சென்ற மூன்றாண்டுகளுக்கும் முந்திய விபவவர்ஷத்திற்றான் இவர்களுக்கு இவ்விதமான யுக்தி தோன்றியது. இவர்கள் இவ்விதமான விஷயங்களைத் தகுந்த ஆராய்ச்சி செய்யாது, தவறாகத் தீர்மானஞ்செய்து வெளியிட்டமையைக்குறித்து மனம் வருந்தாதிருக்க இயலவில்லை. குறித்த சங்கத்தார் இவ்வித விபரீதமான தீர்ப்பை உண்டாக்குவது, சங்கத்தின் மாத்துவத்துக்குக் குறைவாமென்பதைத் தங்கள் மனசிற் பதித்து, இனி இவ்விதமான கருமங்களில் முறை தவறுதிருக்கும்படி வேண்டுகின்றோம்.

ஏறக்குறைய அறுபது வருஷங்களுக்கு முன்னிகழ்ந்த நவராத்திரிவிரத ஞாபகம் எனக்குண்டு. அதற்குமுந்திய பல வர்ஷங்களின் அனுசரிப்பைப்பற்றிய கேள்வியுமுண்டு. அக்காலங்களில் இவ்விதமான குயுக்தியும் குதர்க்கமுந் தோன்றவில்லை. கலியின் முதிர்ச்சி இன்னும் யாதுயாது செய்யுமோ!

நன்மதி யில்லார் நலவுரைத யேற்பரோ
நன்மதி யுள்ளார் நலம்.

ம. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள்,
புலோலி, பருத்தித்துறை.

வீட்டுப்பாவிப்புக்கு உபயோகமுள்ள பொருள்கள் 8.

—சொற்பசெலவுடன்
—சுகத்தைப்பாதுகாப்பதற்கு
—உபயோகமுள்ளன.

லி ஓ பா மருந்துப் பெட்டி

—அடங்கியுள்ளன-லிட்டில்ஸ் ஒறி
—யன்டல்பாம், உணவு குத்தலுக்
—குத்திறமான மற்றும் மருந்து
—குலேப்பன், மலேரியா, காச்சல்
—கட்குத்திறமான 'ஹெக்நீஸ்' ஜவ
—ஹறி ஹெக்நீஸ் ஓமம்-கர்ப்
—பூர், வயிற்றுக்குத்து, சமியாக்
—குணம், வாந்தி பேதி முதலிய
—வயிற்றுநத்தங்க்க சுகங்கொடுப்
—பது. ஹெக்நீஸ் கில்லா-கோல்ட்
—ஜலபா இருமலவில்லைகள், இரு
—மல்கள், சுவாசக்குழலைப்பற்றிய
—ரோகங்கள் முதலியவற்றிற்கு
—இலேசான மருந்து. லி ஓ. பா.
—லக்ஸ ரப்லெற்ஸ், மிகவும் அபாய
—மற்றபேதிமாத்திரை லி ஓ பா.
—சர்மரோகசமாக்ஷணி, வெட்டு
—காயம், உரஞ்சல்முதலியவற்றிற்கு
—வேண்டியவை லி ஒ பா. மண
—மாற்றி, ரச்சக்காற்றைச்சுத்தி
—கரிப்பதி லாகசரியப்படத்தக்கது

இதன் விலை 4

அதாவது.
ரூ. 3 அணு 8.—மேற்குறித்த பொருள்கள் அடங்கிய ஒருபெட்டியை மருந்துப்பொருள் வியாபாரியிடம் வாங்குவதற்குப் போதியது.
முத்திரைச் செலவுவேறு.

லிட்டில்ஸ்
ஓறியன்ரல்பாம் டிப்போ,
பெரியதெரு,
மணிக்கூட்டுச்சந்தி,
கொழும்பு.
அல்லது
லிட்டில்ஸ் ஓறியன்ரல் பாம், அன்ட்,
பாமசியூடிக்கல் லிமிட்ட்,
தபாற்பெட்டி இலக்கம் 67.
சென்னபட்டணம்.
(Y. 9—1 31—12 32) B.

புலாலுண்ணல்.

புலாலுண்ணலாவது உயிரைக் கொன்று ஊனைப் புசித்தலாம். புலாலுண்பவர் இல்லையானால் அதன்பொருட்டுக் கொலை செய்பவருமிலரேயாவர். ஆதலால் புலாலுண்ணலே கொலைப் பாதகத்திலும் கூடிய பாதகமாகின்றது. "அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று." என்று ஆன்றோர் கூறியிருக்கின்றனர். ஆயிரம் யாகம் செய்வதிலும், தீர்த்த யாத்திரை செய்வதிலும் புலாலுண்ணாமையாகியபுண்ணியமொன்றுமே ஒருவனிடமுளதாயின் அதுவே மிகச் சிறந்ததாகும். யாவராயினும் அவர்களுக்குச் செய்யும் நன்மையாவது அவைகளைக் கொல்லாமையும், அவைகளின் மாமிசத்தை உண்ணாமையுமேயாம். இதுபற்றியே, "புலையுங் கொலையுங் களவுந் தவிர்" என்று ஔவையாரும், "அறவினை யாதெனிற் கொல்லாமை" என்று திருவள்ளுவ நாயனாரும் கூறியிருக்கின்றனர். ஒருவன் நம்மை யடிக்கும்பொழுது நாம் எப்படி வருந்துவோமோ அதுபோலவே மற்றப்பிராணிகளும் வருந்தும். ஒருவன் நம்மைக் கொல்லும் பொழுது நாம் எவ்வளவு பதை பதைப்போம்! அப்படியே ஆடு, பன்றி, கோழி, முதலிய பிராணிகளும் வருந்தும். அவைகளுக்கும் உணவு, நித்திரை, பயம், இன்ப துன்பங்கள் என்பன தமக்குப்போலச் சமமாகவே உள்ளனவல்லவா? இப்படியிருக்க நாம் அவற்றைக் கொன்று தின்னுவதா நீதியான செயல்? தான் அடுத்த நிமிஷத்தில் உயிர் நீக்கவேண்டியிருக்குமென்பதை ஒரு சிறிதும் அறியாத ஓர் ஆடானது, கொலை செய்யும் கொடும் பாவிகளின் வசமை அன்புடன் நோக்கிக்கொண்டு நிற்கின்றது. அந்நிலைமையிலிருக்கும் பிராணியைக் கொல்லும் பொழுது அவனுக்கு எவ்வளவு கன்னெஞ்சமிருக்கவேண்டுமென்பதை நினைத்தால் அந்தோ உடல் பதறுகின்றது! மனம் தடுமாறுகின்றது!! புலால் உண்ணும் ஒருவர் தன் சகோதரனுகிய மற்றொரு மனிதன் அத்தொழிலைச் செய்யும்படியாகத் தானே தூண்டுகிறார்!!! அவர் அச் சகோதரனைச் சிவத்தினிடம் போய்ச் சேரவொட்டித் தடுக்கிறாரா? அன்றி நரகத்தில் வீழ்விக்கின்றாரா? அவருடைய ஆஸ்திகம் எத்தனை புன்மை யுடையதென்பதை அவருடைய நெஞ்சமே அவருக்கு நன்றாய்த் தெரிவிக்கும். "அன்பே சிவம்" என திருமூலரும் திருவாய் மொழிந்திருக்கின்றனர். சைவ சமயத்துக்கு அடிப்படை அன்பேயாகும். அவ்வன்பைத் தாங்காது சிவசின்னங்களைத் தாங்கி உயிர்களுக்குத் தீங்கு நினைப்பவர்கள் சைவர்களாகமாட்டார்கள் என ஆன்றோர் கூறியிருக்கின்றனர். கடவுளிடத்தும், ஆருயிரிடத்தும் அன்பு காட்டாத வன்னெஞ்சக் கள்வன், மன வலியனொருவன் அனுட்டான விதிகளை வெகு அழகுபெறச் செய்பவனாயினுஞ் சரியே, சிவலிங்க பூசையை ஆகம விதிப்படி செய்து காட்டுபவனாயினும் சரியே அவன் உண்மையிற் சைவனாகான். இப்பொழுது ஆடு, மாடு, கோழி, நாய் நாம் காண்கின்ற ஜீவன்களை நமது சகோதரர்களாக வல்லவோ பாவிக்கவேண்டும். நாம் முன் ஜன்மங்களில் ஆடு, மாடு, கோழி, நாய் இருந்து இந்த மானிட ஜன்மம் எடுத்திருப்பதுபோல அந்த ஜந்துக்களும் தடையின்றி ஜீவ விகாசத்தினுல், மானுஷ ஜன்மம் எடுக்க இவ்வளவு பிரயாசைப்படுகின்றன. அவைகளைச் சகோதரர்களாகப் பாவித்து, "எவ்வுயிரும் பராபரன் சன்னிதியதாகும் இலங்கும் உடலுயிர் அனைத்தும் ஈசன் கோயில்" என்று பாராட்டாமல் ஜந்துக்கள் நமது ஆகாரத்திற்கு மாத்திரம் சிருஷ்டிக்கப்பட்டவைகள் என்று நினைத்து அவைகளை நாம் கொன்று தின்னுவதை எவ்வுயிர்க்கும் பிதாவான பகவான் சகிப்பாரா? "கொலை" பஞ்சமா பாதகங்களில் முதலாவதாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறதே! அதுபோலவே, கிறிஸ்தவர் வாக்கியத்தில் ("Thou shall not kill") கொலை செய்யாதிருப்பாயாக" என்றிருக்கின்றதே இதனைக் கவனியாமல் கிறிஸ்தவர்களும் தவறான வழியில் நடக்கிறார்கள். "எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகு மிலங்குமுயிருடலனைத்து மீசன் கோயிலெவ்வுயிருமெம்முயிர் போலென்று நோக்கியிரங்காது கொன்றருந்து மியல்பினேனை வெகுளியமதூதருந் தண்டஞ்செய்து வல்லிரும்பை யுருக்கியவர் வாயில் வார்த்து வெவ்விய தீயெரிநரகில் வீழ்த்தி மாறுவேதனை செய்திடுவரென விளம்புதாலே" "இந்நோய் நமக்குண்டென்றெண்ணு நவெவ்வுயிரும், முன்னேநக் கொண்டருந்த மூர்க்கர்தா—மென்னேருவர், பண்ணப்படுகொடிய பாவிகளிற் பாவிகளென், றெண்ணப்படுவரிசைந்து" எனவரும் கற்றறிந்த மேலோர் வாக்குகளைச் சிந்திக்குக. பிறர் பிராணிகளைக் கொலைத் தொழிலைச் செய்த புலாலை அறுப்பதினால், புலாலுண்பவர் கொலைப் பாவத்திற்குட்பட்டவர்களல்லர் என்றும் உண்ணும்பாவம்தான் தங்களைச் சாருமென்றும் சிலர் கூறுகின்றனர் அது சரியன்று. ஏனெனில், உண்பவர்களில்லையானால் கொல்பவர்களிருக்கமாட்டார்கள். ஆகவே கொல்பவர்கள் செய்யும் இரக்கமற்ற கொடும்பாவச் செயலும், கொலைச் செயலுக்குக் காரணராயிருக்கும் உண்பவர்களைச் சாருமென்பது சொல்லாமலே விளங்கும். இதுபற்றியே, "தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும், விலைப்பொருட்டா லூன்றருவாரில்" என வள்ளுவர் பெருமானும் இன்னும், 'கொன்றவன் குறைத்தவன் கொணர்ந்து விற்றவன், ஒன்றிய பொருள் கொடுத் தவைக் கொண்டவன் நன்றற மடைமகன் நாவிற் பெய்தவன் என்றிவரறுவரும் நரகிலெய்துவார் என அறிவான் முதிர்ந்த பெரியோரும் கூறியிருக்கின்றனர். "முன்னரிய மறைவழங்குந் தண்டலையாரகமத்தின் மொழி கேளாமல், பின்னுயிரை வதைத்தவனுங் கொன்றவனுங் குறைத்தவனும் பேருலோனும், அந்நெறியே சமைத்தவனு முண்டவனு நரகுறுவாரதலாலே தன்னுயிர்போலெண்ணு மன்னுயிருக் கிரங்குவதே தக்கதாமே" எனத் தண்டலையார் சதகத்திலும் கூறப்பட்டிருக்கிறது. நாம் பார்த்திருக்கக் கோழிகள் எல்லாவிடங்கட்கும் சென்று மலத்தை யுண்கின்றன. அடுத்த வீட்டில் பிணம் கிடந்தாலும், உணவுக்குள் ஈ, எறும்பு, மயிர், முதலியவைகள் கிடந்தாலும், போசனஞ் செய்யாது வீசிவிடும் கனவான்கள் இம் மலத்தை யுண்ணும் கோழி, பன்றி முதலியவற்றைக் கொன்று, அவற்றின் பிணங்களைக் கறிபாக்கி உண்ணுகிறார்களே. இக்கறிகளும் பிணந்தானே இப்பிணங்களை உண்ண மனமும் எவுகின்றதுதானே! சிச்சீ! இப்பிணத்தை ஓர் யோக்கியன் உண்பானோ? உயிர்களைக் கொல்வானோ? 'புலையன்றன் மலமுண்ணும். நரை யுண்ணும், மனிதர்க்குச்—நலமென்ன கலமென்ன, "கூ" "கூ" எனக் கூவினது கோழி" என்னும் செய்யுட் பாகத்தை நோக்குக. "ஆருயிர் கொலாத மேலோர் நிதியினை யறிந்த நல்லோர், நிறை மொடுக்க வல்லோ ரிவர்களே தேவராவர், காமராய்க் கற்பழிப்போர் களவுசெய் துடல் வளர்ப்போர், மாமிசந் தின்போரெல்லாம் மானுடப் புலையராவார்" "பறையரைப் பறையரென்று பறைந்திடு மனிதர் கேளீர், பறையர்தம் மலத்தைத் தின்னும் பன்றியைப் புசிப்பதேனோ, கறைபதே யாகுமந்தக் கறிதனைக் கலத்திலிட்டு, மறையவே வைத்துத் தின்னும் மனிதரே பறையர் கண்டீர்" எனவரும் மேலோர் திருவாக்குகளைச் சிறிது சிந்தித்துணர்ந்து பாருங்கள். மீன், பன்றி, உடும்பு, ஆமை முதலியவற்றிலும் ஆடுமாடுகளைச் சுத்தமுடையனவாகக் கொள்வது அவை தாவரஉணவுகளை உட்கொள்ளும் சிறப்புப் பற்றியே யென்பது யாவர்க்குமினிது விளங்கும். பூமியில் உள்ள சுடுகாடுகள் மனிதர்களுடைய பிணத்துக்குச் சுடுகாடுகளாயிருக்கின்றன. பக்ஷிகள் மற்சங்களுக்குச் சுடுகாடுகள் இரக்கமும் அருவருப்பும் இல்லாத மாமிச போசனிகளாகிய கொடும் பாதகரின் வயிறுகளே யன்றோ! இதுபற்றியே "தக்கத்துட் டேக்கித் தறவின்கட் சேர்கலா, மக்கட் பிணத்த சுடுகாடு—தொக்க, விலங்கிற்கும் புள்ளிற்குங் காடே, புலங்கெட்ட புல்லறிவாளர் வயிறு" என நாலடியாரிலும் கூறப்பட்டிருக்கின்றது.

சில மனுஷர்கள் விரதகாலங்களில் மாத்திரம் மச்ச மாமிசம் புசித்தலை ஒழித்து மற்றக்காலங்களில் பழையபடி உண்கின்றார்கள். சுத்தமின்றிப் பாவத்தைக் கொடுப்பதுமென்று கண்டறிந்துதானே அவ்வுணவை விரதகாலங்களில் விலக்குகிறார்கள். அக்காலங்களில் ஆகாதது மற்றக்காலங்களில் ஆவது எங்ஙனம்? இதைச் சிறிதேனும் சிந்திப்பார்களாக. "நோன்பென்பதுவே கொன்று தின்னாமை" என்று ஔவைப் பிராட்டியாரும், "கொல்லாமற் கொன்றதைத் தின்னாமல்" என்று பட்டினத்தடிகளும், "கொல்லா விரதங் குவலய மெல்லா மோங்க, எல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே" எனத் தாயுமானசுவாமிகளும் கூறியிருக்கின்றனர். இவைகளொன்றையும் எள்ளளவேனும் பொருட்படுத்தாது மிருகங்களிலும் தாழ்மையாக நடக்கலாமா?

(தொடரும்)

இங்ஙனம்,
கைலாசம் தங்கம்மாள்,
இராமநாத வித்யாலயப் பழையமாணுக்கி,
சிவியாதெரு கிழக்கு.

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

:O:

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச்சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் வண்-மேற்கு பெ அ சி மு அரு அருணாசலம் செட்டியார் கடையில் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பகிரங்க ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபர :—

1930-ம் ஞு ஜனவரி மீ

நம்.	திக.	ரூ.	ச.	ஊர் பெயர் நகைகளின் விபரம்.
10219	2	200		கன்னாதிட்டி சுப்பிரமணியர் சின்னையா சிவப்புக்கல் பதக்கத்துடன் கெட்டிப்பூரானட்டியல் 1, ஷை முகப்புடன் கொலிசுக்காப்பு 2
	மார்ச்சு மீ			
10491	23	300		வண்-கிழக்கு பழனி சதாசிவம் சலங்கைகட்டிய ஒட்டியாணம் 1
	ஏப்பிரல் மீ			
11843	12	412		பறங்கித்தெரு வ மா செல்லத்தம்பு அரைடலர் 1, முருப்பவுண் 4, அரைப்பவுண் 6 அரைக்கால்டலர் 2, பிறுன்சுக்காசு 62 கோர்த்த மாலை 1
	மே மீ			
251	1	300		வண்-கிழக்கு மாருதிபுரம் சோத்தன் தாமர் காப்பு 4 கழுத்துமாலை 1, சங்கிலி 1, வெளி மோதிரம் 1, மோதிரம் 1
	மே மீ			
413	14	40		சோனகதெரு முகம்மது சரிபு முகம்மது சுலைமான் செய்தீன் பொன் காப்பு தட்டுதாலி 1
	ஜூன் மீ			
725	1	12		மண்டைதீவு கதிரவேலு சின்னத்துரை பிள்ளைக்காப்பு 2 வெள்ளிச்சங்கிலி 1
757	3	110		வண்-கிழக்கு கணபதிப்பிள்ளை பெரியதம்பி சங்கிலிக்கொடி 1
797	5	110		பெருமாள்கோவிலடி சினியாசகுஞ்செட்டி இராமசாமிச்செட்டி அரைஞாண் கொடி 2, பின்கோர்க்கி 1, செடிலை செய்து கோர்த்த சங்கிலி 1
805	5	200		அச்சுவேலி நாகமணி செல்லமுத்துப்பத்தர் பதினாலு வயிரச்சன்னம் கட்டிய தோடு சோடி 1
808	6	17		வண்-கிழக்கு ஆறுமுகம் இராசேந்திரம் முருகுக்காப்பு 1
836	7	107		சங்கானை தன்னித்தம்பி காவலிங்கம் முகப்புடன் கெட்டிக்கொலிசு 2
810	7	90		வண்-மேற்கு வீ கதிரவேலுப்பிள்ளை வேதநாயகம்பிள்ளை இமிகல் வைத்த காப்பு 2, அரைடலர் 1, கால்டலர் 1, அரைக்கால்டலர் 1
817	8	38		சண்டிலிப்பாய் மூத்தர் சின்னையா கம்பிப்பூரானட்டியல் 1
835	8	10		அத்தியடி ஆறுமுகம் வைத்தியலிங்கம் கவுத்தோர் 1
865	9	10		சோனகதெரு செயினுமுகம்மது முகம்மது கிழாவர் மோதிரம் 1
867	9	10		கொக்குவில் மேற்கு சுந்தரம் சின்னையா கல் கவுத்தோர் 1
870	9	80		பழைசேகு முகம்மது முகம்மது அப்துல்காதர் கொலிசுக்காப்பு சோடி 1
880	9	105		தாவடி துரையப்பா சுப்பையா சங்கிலிக்கொடி 1, சிகில் மோதிரம் 1
899	11	8	50	காலாம் குறச்சுத்தெரு வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் சிகில் மோதிரம் 1
922	12	50		சிற்றங்கேணி நல்லதம்பி நவரத்தினம் கெட்டிக்காப்பு சோடி 1
938	13	20		வண்-கிழக்கு நாகலிங்கம் நாகரத்தினம் அட்டிகைகூடு 1, கல்மோதிரம் 1 கிழாவர் மோதிரம் 1,
979	16	50		சுழிபுரம் குப்பத்தம்பு முருகேசு புலிநகம் 1, அரைப்பவுண் 1, பொட்டு 1 கோர்த்த குண்டுச் சங்கிலி 1, வெள்ளிக் கால்சங்கிலி 2
982	16	10		சங்கானை-மேற்கு பொன்னம்பலம் நல்லதம்பி பொன் சிகில்மோதிரம் 1
1026	18	12		அராலி-தெற்கு சின்னத்தம்பி மாணிக்கம் கல்புரூச்சு 1, கல் மோதிரம் 1
1033	19	30		வண்-மேற்கு வீ கதிரவேலுப்பிள்ளை வேதநாயகம்பிள்ளை கல் மோதிரம் 2, தடை 4, சாதா தடை 2, குண்டுவைத்த கால் டலர் 1
1050	19	9		இணுவில் தம்பிப்பிள்ளை அருணாசலம் கொண்டைப்பூ 1, சிமிக்கி 2
1053	20	57		திருநெல்வேலி கார்த்திகேசு கணபதிப்பிள்ளை பீலிக்காப்பு சோடி 1
1062	20	90		சோனகதெரு கதிர்காமர் கதிரேசப்பத்தர் குண்டு 2 கோர்த்த சரட்டுக் கொடி 1
1072	21	40		சிறுப்பிட்டி கார்த்திகேசு சின்னத்தம்பி கம்பிப்பூரான் அட்டியல் 1
1084	21	10		பிரம்படி சின்னையா சண்முகம்பிள்ளை கிழாவர் மோதிரம் 1
1093	22	12		மானிப்பாய் துரையப்பா சின்னையா இமிநீலக்கல் மோதிரம் 1
1097	22	17		வண்-கிழக்கு சிதம்பரநாதர் சிற்றம்பலம் கல் கவுத்தோர் 1
1101	22	115		ஆரியகுளத்தடி பொன்னம்பலம் சின்னையா பாலைக்கொட்டை மாலை 1, சங்கிலி ஒன்று
1102	22	50		ஆரியகுளத்தடி பொன்னம்பலம் சின்னையா வயிரச்சன்னம் 2ம் சிவப்பு 2ம் பச்சை 1ம் கட்டிய மோதிரம் 1
1114	23	50		பெரியகடைத்தெரு நாகமுத்து வேலாயுதபிள்ளை பதக்கத்துடன் கம்பி பூரானட்டியல் 1
1124	24	50		கொழும்புத்துறை நீ வெலஸ் செல்லத்துரை சாதா பீலிக்காப்பு 2
1137	25	10		வட்டுக்கோட்டை கணபதிப்பிள்ளை அம்பலவாணர் இமிகல் மோதிரம் 1
1147	25	80		வண்-கிழக்கு பெரியதம்பி பழனிவேலு [illegible] கொலுசுக்காப்பு 2
1148	25	16		வண்-கிழக்கு இராமலிங்கம் சோமசுந்தரம் இமிகல் புரூச்சு 1
1175	27	60		வேலணை இராமு சின்னத்தம்பி பட்டணக்காப்பு சோடி 1
1177	27	45		உரும்பிராய் யோசேப்பு சாமிப்பிள்ளை முறிச்சுக்குத்தி அட்டியல் 1
1183	28	280		வண்-கிழக்கு கணபதிப்பிள்ளை பெரியதம்பி பூக்காப்பு 2 சிவப்புக்கல் தோடு 2, அரைஞாண் கொடி 1, புலிநகம் கோர்த்த குண்டுச்சங்கிலி 2
1184	28	31		வண்-கிழக்கு கணபதிப்பிள்ளை பெரியதம்பி கைச்சங்கிலி 1
1218	29	6		அஞ்சனந்தாழ் செல்லன் அப்பாத்துரை கல்தோடு சோடி 1
1231	30	17		பறங்கித்தெரு J R ஜேன் கம்பி வளையல்காப்பு 2
	ஜூலை மீ			
1252	1	75		வண்-கிழக்கு தம்பையா கனகசபை முகப்புடன் கெட்டிக்கொலிசு 2
1262	2	7		வண்கிழக்கு நாகமுத்து சண்முகம் இமிநீலக்கல் மோதிரம் 1
1264	,,	15		குசவன்குளம் வேலுப்பிள்ளை அமரசிங்கம் சிவப்பு கல்தோடு சோடி 1
1323	5	50		பறங்கித்தெரு அப்துல்கரீம் அப்துல்வாகிட் குண்டுச்சங்கிலி 1
1343	6	9		வண்கிழக்கு கணபதிப்பிள்ளை பெரியதம்பி அச்சுவளையல்காப்பு 6
1345	,,	17		காரைநகர் ச இராமநாதர் இராமலிங்கம் இமி நீலக்கல்மோதிரம் 1ம், கல் மோதிரம் 1
1363	7	10		நீராவியடி தம்பு சுப்பிரமணியம் கல் காதோலை 2
1365	,,	12	50	சிறுப்பிட்டி தில்லைநாதர் வைத்திலிங்கம் சிகில்மோதிரம் 1
1384	8	30		வண்கிழக்கு கணபதிப்பிள்ளை பெரியதம்பி இமிகல் முகப்புடன் அச்சுக்காப்பு 2
1416	9	54		வண்மேற்கு மயில்வாகனம் பொன்னம்பலம் அச்சுக்காப்பு 2
1438	10	10		கொக்குவில் சின்னக்குட்டி வயித்தி பிள்ளைக்காப்பு 2
1451	11	75		சோனகதெரு சுல்தான்கண்டு நானு பதக்கத்துடன் சங்கிலி அட்டியல் 1-ம், உவாச்சி சங்கிலி 1
1460	,,	100		சுன்னாகம் முதலித்தம்பி செல்லப்பா பதக்கத்துடன் முறிச்சுக்குத்தி அட்டியல் 1-ம், கைச்சங்கிலி 1
1462	,,	75		ஷை யூர் ஷையார் முகப்புடன் அச்சுக்காப்பு 2
1473	12	25		கொக்குவில்மேற்கு சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை கவுத்தோர் 1-ம், சிவப்புக் கல்தோடு 2
1504	14	12		திருநெல்வேலி சின்னத்தம்பி வேலுப்பிள்ளை சிகில்மோதிரம் 1
1505	,,	28		கொழும்புத்துறை மயிலு சங்கரப்பிள்ளை கம்பிப்பூரானட்டியல் 1
1558	15	7		[illegible] சின்னத்தம்பி வேலுப்பிள்ளை இமி கல்தோடு சோடி 1
1547	16	30		நீர்வேலி சின்னையா தம்பையா கல்கவுத்தோர் 1
1569	17	25		வண்மேற்கு மருதன் சின்னத்தம்பி பிள்ளைக்காப்பு சோடி 1
1577	,,	15		ஷை யூர் கார்த்திகேசர் சம்பந்தர் கல்மடல் 1
1606	19	8		செட்டித்தெரு கதிரவேலு சுப்ரமணியம் மோதிரம் 1
1625	20	50		ஷை யூர் வீரகத்தி சின்னையா குண்டுச்சங்கிலி 1
1635	21	35		மறவன்புலோ முருகேசு கணபதிப்பிள்ளை முறிச்சுக்குத்தி அட்டியல் 1
1638	,,	70		பெருமாள்கோவிலடி விசுவரெத்தினம் சோமசுந்தரம் சரட்டுக்கொடி 1
1649	,,	50		வண்மேற்கு கார்த்திகேசர் சம்பந்தர் டிம்மியுடன் முறிச்சுக்குத்தி அட்டியல் 1
1650	,,	175		ஷை யூர் ஷையார் முகப்புடன் ஒட்டியாணம் 1
1660	,,	60		வண்மேற்கு சுப்பஞாசாரி சோலைமலையாசாரி சிவப்புக்கல் மாலைப்பதக்கம் 1
1667	22	45		செட்டித்தெரு பொன்னம்பலம் சுந்தரம் டிம்மியுடன் கம்பிப்பூரானட்டியல் 1
1671	,,	45		தெல்லிப்பழை சின்னப்பு செல்லையா உவாச்சி சங்கிலி 1
1672	,,	42		மானிப்பாய் கந்தன் நாகன் கிளி 1
1675	,,	11		கோப்பாய் எலியான் குமரப்பிள்ளை கல்தோடு சோடி 1
1676	,,	9		பரித்தித்துறை வேலுப்பிள்ளை சபாரத்தினம் கல்மோதிரம் 1
1680	,,	10		வண்கிழக்கு விசுவநாதர் சின்னையாபிள்ளை ஆடுதன்மோதிரம் 1
1750	26	85		வண்கிழக்கு நாகமுத்து சண்முகம் சிவப்புக்கல் பதக்கத்துடன் பட்டம் வெட்டிய அட்டியல் 1-ம், முகப்புடன் கெட்டிக்கொலிசு சோடி 1
1755	26	10		நீராவியடி வயித்திலிங்கம் சுந்தரம் கல்தோடு சோடி 1
1777	27	15		வண்கிழக்கு மன்னர் செட்டியார் இராமசாமி கல்மோதிரம் 1-ம், சிகில் மோதிரம் 1
1780	,,	40		காரைதீவுமேற்கு ஆறுமுகம் கணபதிப்பிள்ளை பழுதுச் சரட்டுக்கொடி 1
1783	,,	20		வேலணை கனகசபை மயில்வாகனம் காவடியில்லாத பிள்ளைக்காப்பு 2
1808	28	28		வண்கிழக்கு மன்னர் செட்டியார் இராமசாமி கொலிசுக்காப்பு 2
1811	,,	70		ஷை யூர் ஆறுமுகம் பொன்னுத்துரை குண்டுச்சங்கிலி 1
1833	29	15		கொக்குவில் சங்கரப்பிள்ளை கனகசபை கல் டிம்மிப்பதக்கம் 1
1838	,,	225		வேலணை நாகநாதர் சபாபதிப்பிள்ளை முகப்புடன் பீலிக்காப்பு 2ம், கவுத்தோர் 1ம், கல்மோதிரம் 1ம், கெட்டிக்கொலிசு 2ம், முருப்பவுண் ஒன்று கோர்த்த குண்டுச்சங்கிலி 1ம், கிழாவர் மோதிரம் 1ம், பதக்கத்துடன் கம்பிப்பூரானட்டியல் 1ம்
1861	30	10		ஊர்காவற்றுறை இராமனுதர் சடையர் சிகில்மோதிரம் 1
1896	31	210		வண்கிழக்கு இரகுநாத முதலியார் தில்லைநாதமுதலியார் அமரிக்கன் டலர் கோர்த்த உவாச்சி சங்கிலி 1ம், சிறுசு பெருசு பொத்தான் 9

விற்பனவு:—பிரசோற்பத்தி ஹு புரட்டாதி மீ 10-ம் திகதிக்குச்சரியான (26-9-31) சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்ட நகை பிரீக்கலாக மேற்படி ஷை கடையில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

சி ஐயம்பிள்ளை உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.

(Mis. 863 10&14)

டாத நேரத்தில் அவற்றைச் சனசம்மதத்தோடு தவிர்த்தலும் முடியுமென ஸ்ரீ இராசரத்தினமவர்கள் சொல்லினர்.

* * *

மதுவபிமானியாகிய தம்பையா சொற்குற்றம்பொருட்குற்றம் பிடித்துக்கொண்டிருக்கின்றார். கள்ளைத் தடுத்தபடியினாற்றான் அந்நிய நாட்டுக் குடிவகை இங்கே அதிகமாக வருகின்றதென்று மிஸ்டர் குணசேகரம் பகர்ந்து, தவறணையிலுள்ள கள்ளு அதிகமாகப் புளித்துவிடுகிறதென்றும் உடன்கள்ளு அவ்வளவு புளிக்கமாட்டாதென்றும் அநேகர் "பஸ்"கள் மூலமாகச் சாவகச்சேரி மிருசுவில் முதலாம் கள்ளுள்ள விடங்கட்குப் போய்க் குடிப்பதனால் அவர்களுடைய பணமும் மானமும் அநியாயமாகச் செலவாகின்றதென்றும் இயம்பினர். இனிமேட்டோ கள்ளுதன் நல்லகள்ளைத்தான் சனங்களுக்கு அருந்தவேண்டும் என்பதும் குணசேகரத்தின் நோக்கமாகும்.

* *

ஸ்ரீ சு. சிவபாதசுந்தரமும் "தவறணை மூலமாகக் குடிப்பதே நல்லது; மரவரி முறைவந்தால் இங்குள்ள ஆடவர் மாத்திரமல்லர்; பெண்கள் சிறு பிள்ளைகளும் கள்ளுக் குடிக்கப் பழகிவிடுவார்கள் என்றனர் ஸ்ரீ R. R, நல்லையா அவர்கள் "மரவரி விதிக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய எண்ணமுமாம். கள்ளை எங்கள் நாட்டிற் கடுமையாகத் தேவைப்படுகின்றனர். சனங்களுக்குக் கள்ளு யதேஷ்டமாகக் கிடைக்குமானால் அந்நிய நாட்டுக் குடிவகைகளை விட்டுவிடுவார்கள். இப்பொழுது பெரும் நச்சுத்தன்மையான அந்நிய பானங்களைக் குடிக்கிறார்கள். மரவரி வைத்தால் பெண்களும் பிள்ளைகளும் குடிக்கப் பழகிவிடுவார்களென்று ஸ்ரீ சிவபாதசுந்தரம் சொன்னது பேய்த்தனம்; குடித்த பெண்கள் குடிப்பார்கள்தான்; குடியாதவர்கள் குடிக்கப் பழகமாட்டார்கள்தான்; அல்லாமலும் கள்ளு ஒரு சிறந்த உணவு" என எடுத்துரைத்து முடித்தனர்.

[ஸ்ரீ நல்லையா அவர்கள் "குடித்த பெண்கள் குடிப்பார்கள்தான்; குடியாத பெண்கள் குடிக்கப் பழகமாட்டார்கள்தான்" எனக் கூறிய கூற்றிலுள்ள தர்க்கரீதி நோக்கத்தக்கது.]

* *

மதுபானம் பஞ்சமாபாதகங்களுள் ஒன்றாக மதிக்கப்படுதலால், முன்னிருந்தோர்கள் மதுபானஞ் செய்வோரைப் புறக்கணித்து வைத்தார்களென்றும், அதனாற்றான் அக்காலத்திலே குடிகாரர் மிகச் சிலராயிருந்தனரென்றும், இக்காலத்திலே சமயாபிமானம் தெய்வபக்தி அருகிவிட, சாதி மகத்துவங்கள் தொன்மை முதலியன கெட்டுவிட, குடிகாரர் அதிகப்பட்டனரென்றும், ஸ்ரீ இராசரத்தினம் அவர்கள் சொல்லி முடித்தார். இவ்விஷயமாக ஸ்ரீ இராசரத்தினமவர்கள் சொன்னவை அத்தனையும் உண்மையாம். மிஸ்டர் கெவின்ஸ் செல்வத்துரை அவர்கள் "கள்ளல்ல, ஏராவே நல்ல பானமென்றும் குழந்தைகள் சில தொற்று நோயுற்ற காலத்தும் அது மருந்தாக உபயோகிக்கப்படுவதென்றும், மரவரியல்லாமல், தவறணை பல தீமைக்கு இடமாக விருத்தலால் தாம் அதற்கு மாறு" என்றுங் கூறினர்.

[மதுபான விஷயமாக அன்று வெளிவந்த அபிப்பிராய பேதங்கள் இன்னுஞ் சிலவுள. அவையும் மிஸ்டர் தம்பையாவின் கூற்றும் பின்னர் வெளிவரும்.]

புகையிரதத் தாமசம்.

நேற்று (9-9-31) மாலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் புறப்பட்ட புகையிரதத் தொடர் மிருகமத்திற்கும் அம்பேபுசைக்கு மிடையே வரும்போது யந்திரம் பழுதுற்றமையினால் 3 மணித்தியாலம் வரையில் தாமசமாகி யாழ்ப்பாணப் புகைரதஸ்தானத்தில் 10 மணிக்குமேல் வந்து சேர்ந்தது.

விவாகம்.

யாழ்ப்பாணத்துநீர்வேலி ஸ்ரீ இராமுப்பிள்ளை பூதத்தம்பி அவர்களின் புத்திரரும், சுன்னாகம் மயிலணிச் சைவவித்தியாசாலை ஆசிரியருமாகிய ஸ்ரீ. சின்னத்துரை அவர்களுக்கும், அவ்வூர்க் கிராமச்சங்க அங்கத்தவருள் ஒருவராகிய ஸ்ரீ சி. பூதத்தம்பி அவர்கள்பௌத்திரியும், ஸ்ரீ குமாரவேலுப்பிள்ளை அவர்களின்புத்திரியுமாகிய ஸ்ரீமதி தையல் அம்மாளுக்கும் இந்த ஆவணி௴ ௧௫௳ (31-9-31) திங்கட்கிழமை சைவாகம முறைப்படி விவாகக்கிரியைகள் அதிவிமரிசையாக நடத்தப்பெற்றன. தம்பதிகள் நீடூழிவாழச் சிவபிரான் திருவருள் பாலிப்பாராக. கடித.

மாஹாத்மாவின் செய்திகள்.

3-9-31.

இன்றுவரையும் காந்தியாரின் கப்பற்பிரயாணம் விசேடசம்பவமற்றதாயிருந்தது. இன்று கப்பல் மாலுமியாகும் மிஸ்டர் எச். மோட்டன் ஜாக்ஸன்பவர் மகாத்மாவைக் கப்பலிற் சுக்கான் சில்லைப் பிடித்து அதை ஓட்டும்படி விட்டனர், இப்பெரிய கப்பலாகும் "இராசபுத்தானா"வை அவர் வழக்கமான வேட்டியைக்கட்டிக்கொண்டு சுக்கான்பிடித்து ஓட்டும்போது மாலுமி அவருடைய தலைக்குமேலாக அவர் ஓட்டுவது சரிதானோவென்று பார்த்துக்கொண்டு நின்றனர். [இராசபுத்தானாவையும் இன்னும் எத்தனையோ மாகாணங்களையுங் கொண்டதும் 36 கோடி சனங்கள் ஏற்றப்பெற்றதுமான இந்தியா வென்னுங் கப்பலை ஓட்டும் மகாத்மாவுக்கு இராசபுத்தானாக் கப்பலை ஓட்டுவது பெருங் காரியமாகுமா? ப-ர். இ-ம்]

பின்பு காந்தியார் புன்னகையுடன் மாலுமியைப் பார்த்து 'இந்தப்படகைக் கவிழ்த்துவிடமாட்டேனென்று நான் நம்புகிறேன்" என்று கூறிக்கொண்டு கப்பலிற் சுக்கானை விடுத்திருப்பினர்.

அதன்பின் கப்பலோட்டுவதற்கான அநேக யந்திரங்களை அவர் நுணுகி யாராய்ந்துவிட்டு, கப்பல் மாலுமியினால் யந்திர அறைக்கும், ஆகாயவசனி யந்திர அறைக்கும், கடற்பட அறைக்கும் காந்தியார் அழைத்துச் செல்லப்பட்டனர் அங்கெல்லாம் ஒருவித்தியாசாலை மாணவன்போல மிக ஆராய்வுடன் அங்குள்ள கருவிகளையெல்லாம் பார்த்தனர்.

மாலுமி தனக்குக் காட்டிய பெரும் அன்பையும், உபசாரத்தையும்பற்றி மிகவும் மனமகிழ்ந்தவராகக் காணப்பட்டனர். இதுவரையில் அவர் கப்பலின் பிற்பக்கத்தில் தமது அறையில் மிகத் தனிமையாகவும் ஒருவராலும் சட்டைபண்ணப்படாதவராயும் காணப்படுகின்றாரென அவரின் சிநேகிதர்கள் கூறினர்.

போபால் நவாப்பு, பண்டித மதன மோகன மாளவியா, மிஸ் சிலேட் ஆகிய மூவரும் மிக வருத்தப்பட்டவர்கள்; இன்று தெளிவுற்றவராகக் காணப்படுகின்றனர். பிரயாணத்தின் முதல் நான்கு நாளும் கடலின் அமைதியீனம் மிக உரமாகவிருந்தது.

காந்தியின் பிரயாணப் பொருள்கள்.

கப்பற் றந்தி 4-9-31.

ஒரு பிரித்தானிய கப்பலிலே காந்தியிலும் பார்க்க விநோதமான பிரயாணி ஒருபோதும் பிரயாணம் பண்ணவில்லை யெனலாம்.

காந்தியார் கப்பலில் ஏறின நிமிடந் தொடக்கம், அவர் ஒரு நூதனப் பொருளாக எல்லாராலும் மதிக்கப்பட்டார். இப்படி மதிக்கப்பட்டமை அவருடைய உலகப்பிரசித்தியான கீர்த்தி புருஷத்துவம், வழக்கத்தை அநுசரியாமை ஆகிய குணங்களினால் மாத்திரமல்ல. அவருடைய பிரயாணப் பொருள்களின் நூதன சேர்க்கையினாலேயுமாம்.

அரை டசின் கையினால் நெசவுபண்ணப்பட்ட வேஷ்டிகள்
மூன்று நூல்நூற்கும் ராட்டினங்கள்,
யேர்வாடா சிறைச்சாலையிலிருந்து கொண்டுவந்த தகரப்பானைகளும் தட்டுகளும் (இவற்றுடன் அவர் மிகப் பற்றுக்கோடுடையவராகக் காணப்படுகின்றனர்)
பதம்பண்ணிப் பத்திரப்படுத்தப்பட்ட 10 கலன் வெள்ளாட்டுப்பால்.
ஒருகட்டுக் காகிதங்கள்.
ஒருகைக்கோல் மெத்தை.
அமெரிக்காவிற் செய்யப்பட்ட ஒருகடிகாரம்.
வெயர்வைக்கணியுஞ் சட்டையொன்று.
நெஞ்சக் கம்பளிப் போர்வைகள்.
'ஹென்றி - டீ. தோரோ வினால் இயற்றப்பட்ட 'சாத்வீக ஒத்துழையாமையைப் பற்றிய நூல்" பிரதி ஒன்று.

வியப்பை யுண்டாக்கும் தன்மையில் காந்தியாரின் பொருள்கள் மாளவியாவின்பொருள்களினும்வெற்றிகொண்டனவாயிருந்தன. அவற்றுள் கங்கா தீர்த்தமும், கங்கையின் சேறும் இருந்தன.

ஆயத்தமொன்றுமில்லை.

தரையில் என்னென்ன செய்வாரோ அவைகளையே கடலிலும் அவர் செய்கின்றார். அதிகாலை 4 மணிக்கு துயில் நீத்தல், செபம், உலாவுதல், எழுதுதல், கடிதங்களுக்குப் பதிலுரைத்தல், தியானம், பண்டித மாளவியா, சரோஜனி தேவி, சேர் பிரபு சங்கர்பட்டாணி ஆகியவர்களுடன் அளவளாவுதல், வழக்கமான சாப்பாட்டை யருந்துதல் ஆகியவைகளே அவரின் தினசரி வேலையாகும்.

"நான் ஒன்றை முன்னேறியே ஆயத்தப்படுத்தமாட்டேன். லண்டன் பட்டணத்திலே மிஸ்டர் மக்டொனல்டையும் வட்டமேசைச் சமாசத்தின் மற்றைய பிரதிநிதிகளையுஞ் சந்தித்தவுடன் சொல்லவேண்டியவைகளெல்லாம் தாமே வரும்" என்று ரேய்டர் பிரதிநிதிக்கு காந்தியார் கூறினர். தொடக்கத்திலேயே வட்டமேசைச் சமாஜ அடிப்படையான பிரச்சினைகளில் வித்தியாசபாவத்தினால் அதுகுலைவுறாது இருந்தால் நவம்பர் 1௳ வரையில் சமாஜம் நடைபெறுமென காந்தியார் நினைக்கின்றனர்.

லண்டனை அடைந்தவுடன் தாம் மிஸ்டர் மாக்டொனல்ட், மிஸ்டர் போல்ட்வின், லோட் ஷாங்கே, லோட்பீல், லோட்றீடிங் இன்னும் மற்றைய பிரதானிகளுடன் கலந்து இந்தியத் தேசிய மஹாசபை இன்னின்ன கேட்கின்றது என்று மறைவின்றிக் கூறிவிடுவதாகவும் கூறினர்.

பிள்ளைகளுடன் துள்ளி விளையாடல்.

கப்பலில் ஏறியிருக்கும் சிறு குழந்தைகளுடன் துள்ளி விளையாடுவதிலும் அவர்கள்மீது ஓயாத கருணையும் அன்பும் காட்டுவதிலும், காந்தியாருடன் இராசிய விஷயத்தில் எதிரிசாதிப்பாரும் அவர்மீது பெரும் அன்பு பாராட்டத் தொடங்கிவிட்டனர். அவர் விளையாடுகிறார், கேலி பண்ணுகிறார், தள்ளுகிறார், பிள்ளைகளின் கழுத்துகளில் கூச்சங் காட்டுகிறார், அவர்களை வைத்துத் தடவுகிறார், அவர்களுக்கு உபகதைகள் கூறி மகிழ்விக்கின்றார்.

கப்பலின் தட்டில்படுத்து, நன்குஉறங்குகின்றனர்.

பூனைக்குந் தோழன்.

எப்பொழுதும் பிரியாது அவருடன் இருக்கும் தோழன் அக்கப்பலுக்குரிய பூனையாகும். அப்பூனைக்கு வெள்ளாட்டுப்பால் ஊட்டி இரவில் தன்னுடன் கூட கைக்கோல் மெத்தையில் வைத்துப் படுத்துக்கொள்வார்.

அவருடைய வலது கையிற் சுகவீனம் தொந்தரவு கொடுக்கின்றது. இச்சுகவீனம் அநேக காலத்திற்கு முன்னே அக்கையில் ஏதோ தாக்கியதினால் அப்பொழுதே உண்டுபட்டது. ஆனால் அவருடைய வைத்தியர்கள் அதனால் எவ்வித பயப்பாடும் இல்லையென்கின்றனர்.

தேசியக் கொடியை உயர்த்தி அதற்கருகில் நடந்த விழாக் காலத்தில் ஏடினிலுள்ள பார்சியர்கள் 4000 ரூபா கொடுத்தனர்.

'என்னென்ன செய்வேன்'

கப்பலிலே உடன் பிரயாணம்பண்ணும் ரேய்டர் நிருபர் மஹாத்மாவை நோக்கி, லண்டனுக்குப் போய்ச் சேர்ந்தவுடன் அவர் என்னென்ன செய்வாரென்று கேட்டதிற்கு மஹாத்மா கூறியது:—

நான் இந்தியா எவ்வித எசமானுக்குக்கீழ் இல்லாமல் இருப்பதற்கும், எவருடைய அபிமானிப்பை எதிர்பாரா திருப்பதற்கும் ஆகிய அரசாட்சி யமைப்பைக் கொடுப்பதற்கு பிரயத்தனப்படுவேன். இந்தியா இவ்விதத்திற்குப் பாவம் செய்யவேண்டுமாயினும் பாவம் செய்யும் உரித்தையும் அதற்குக் கொடுப்பேன். தேசத்தில் மிக எளியவர்களாயுள்ளார் தாமும் இந்தியாவை ஆக்குவதற்கும் அது தமது தேசமென்று உணருவதற்குமான இந்தியாவை; உயர்ந்தசாதி, தாழ்ந்த வகுப்பு என்னும் பாகுபாடில்லாத இந்தியாவை; எல்லாச்சாதி சமயத்தவரும் ஒற்றுமைப்பட்டு சீருடன் வாழும் இந்தியாவை ஆக்குவதற்குப் பிரயத்தனப்படுவேன்.

இப்படியான இந்தியாவிலே தீண்டாமை யென்னும் பொல்லாங்குக்கும் குடிவெறி யென்னும் சாபத்திற்கும் இடமேயிராது.

பெண்களும் ஆண்களைப்போலவே சம உரிமை உடையராயிருப்பர்.

நாங்கள் உலகத்தின் எல்லாப் பாகங்களுடனும் சமாதானமாக விருப்போமாகையால்—அதாவது ஒருவரையுஞ் சூறையாடாமலும், ஒருவராலும் சூறையடிப்படாமலும் இருப்போமாகையால்—எங்களுக்குக்கூடிய அளவு சிறிய சேனை போதியதாகும்.

வாயடக்கமுடைய கோடிக் கணக்கானோரின் உரிமை நலங்களுக்கு முரண்படாதனவைகள் யாவும் அதி சாக்கிரதையாகப் போற்றப்படுவனவாகும். சுதேசிய அன்னியவென்னும் வித்தியாசப் பாராட்டை நான் வெறுக்கிறேன்.

இதுவே என் கனவிற் தோற்றும் இந்தியாவாகும். இத்தகைய இந்தியாவுக்காகவே அடுத்த வட்டமேசைச் சமாசத்தில் நான் போராடுவேன், நான் அபசயமடையலாம். ஆனால் எனது எசமானர்களாகும் மஹாசபை (Congress)ன் நம்பிக்கைக்குப் பாத்திரனாவேனல் இவற்றிற்குக்குறைய வேறெது கிடைப்பினும் திருப்தியடையமாட்டேன்.

மௌலானா சௌகத் அலி.

போட்சிட் 7-9—31.

இத்துறையிலே மௌலானா சௌகத் அலி 'இராசபுத்தானா'வில் ஏறினர். மஹாத்மாவுடனும் போபால் நவாப்புடனும் அவர் அளவளாவினர்.

இரண்டாவது வட்டமேசைச் சமாஜம்.

லண்டன், 7-9-31.

இன்று சாயந்தரம் வட்டமேசைச் சமாசம் 7மாசத்தின்பின் கூடியது. செண்ட்ஜேம்ஸ் மாளிகையில் சம்யுக்தராச்சியத்திட்டச் சங்கம் கூடிய பொழுது லோட் ஷாங்கே தலைவராக வமர்ந்தனர்.

இச்சங்கத்தின் 31 பிரதிநிதிகளில் ஏறக்குறைய அரைவாசிப்பேர் பிரசன்னராயினர். காந்தியுள்பட மற்றைய அரைவாசிப்பேரும் இக்கிழமை முடிவில் வருவார்களெனக் காத்திருக்கப்படுகின்றது.

முதன்மந்திரியாராகும் மிஸ்டர் மாக்டொனல்ட் எல்லாப்பிரதிநிதிகட்கும் வரவேற்ற உபசாரங் கூறினர்.

போட்சீட்டில் காந்தி.

லண்டன், 7-9-31.

இராசபுத்தானா வென்னுங் கப்பலில் செல்லும் ரெய்டர் நிருபர் கூறுவதாவது:—அதிகாலை 3 மணிக்குக் கப்பல் போட் சீட்டுக்குக் கிட்டியவுடன் அங்குள்ள இந்தியர்களின் ஒரு கூட்டத்தார் மஹாத்மாவை வரவேற்று உபசரித்தனர். காந்தியாரும், அவருடைய ஆங்கில சிஷ்வியையாகும் மிஸ் சிலேட் என்பாரும் பூச்செண்டுகள் வழங்கப்பெற்றனர்.

எகிப்தியர்களுடைய நோக்கங்களைப்பற்றிய அபிப்பிராயத்தைக்கேட்டபோது மகாத்மா "இந்தத் தேசம் எதை உரிமையுடன் விரும்புகின்றதோ அவையெல்லாம் அதற்குக் கிடைக்க வேண்டுமென நான் விரும்புகின்றேன். இந்தியாவுக்குப்போல எகிப்துதேசத்திற்கும் சுதந்தரம் பலாத்காரமற்ற முயற்சிகளினாலேயே வரவேண்டும்" என்று பதிலுரைத்தனர்.

எகிப்திய அரசாட்சியார், மகாத்மாவைத் தரிசித்தற்கு வரவெண்ணியிருந்த அநேக எகிப்திய இந்தியச் சிநேகரர்களையும் அபிமானிகளையும் வாராது தடுத்தமையை அறிந்தபொழுது அவர் மிக மனமழுங்கியவராகக் காணப்பட்டனர். 20 பேருக்குக் குறைவாகவேயுள்ள தொகையினர் கப்பலுக்கு வர விடப்பட்டனர்.

கப்பலுக்கு வர விரும்பியவர்கள் ஒவ்வொருவரையும் பொலிசார் மிக நுணுகிப் பரிசோதனை செய்தும் மகாத்மாவைப் படம்பிடிக்கக்கூடாதென்று தடைசெய்தும் விடப்பட்டனர். மகாத்மா மனஞ்சோர்வடைந்தவராகக் கப்பலில் சுக்கான் புறத்தில் யோசனையுடன் உட்கார்ந்திருந்தனர். இவ்விடத்தில் தம்மைக் காண வருபவர்களுடன் பேசவேண்டுமென்னும் நோக்கத்துடன் அவர் வழக்கமான மௌன விரதத்தை 24மணிநேரத்திற்கு முன்னதாகவே முடித்துக்கொண்டிருந்தனர். இதுவே அவருக்கு அதிகம் எரிச்சலைக் கொடுத்தது போலும்.

"காந்திக்குப் பாதுகாப்பு."

லண்டன், 7-9-31.

லண்டன் வட்டமேசைச்சமாஜத்திற் கலரும் பிரதிநிதிகளாகும் காந்தியாரையும் ஏனைய பெரியார்களையுஞ் சாவதானமாகப் பார்த்துக்கொள்ளும்படி பொலிஸ் பகுதியாருக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டதில், எவ்வித விசேடவுத்தேசமும் இல்லை. அதி கீர்த்திவாய்ந்த பெரியார்கள் வருங் காலங்களில் இப்படியான பாதுகாப்புச் செய்வது வழக்கம்.

[இதற்குமுன் ஒரு தந்திச்செய்தியில் "காந்தியாருக்குப் பாதுகாப்பு" என்னுஞ் சமாச்சாரம் வந்தது. அதை, விரோதபுத்தி காந்தியாருக்கு நடக்குமென அரசாட்சியார் நினைக்கிறார்களென்று சனங்கள் எண்ணிவிடுவாரோவென யோசித்தே இத்தந்தி பிரசுரமாயதுபோலும். ப-ர்.]

மிஸ்டர்: கே சி.ரேய் சடுதிமரணம்.

இந்தியசட்டமகாசபையிலே மிஸ்டர் அலெக்சாண்டர் ரொக்சையியின் மரணத்தைப்பற்றி அநுதாபப்பிரசங்கங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கையில், கே. சி. ரேய் அறிவுகெட்டு விழுந்தனர். உடனே சபையின் நாயகர் 15 நிமிடங்களுக்குச் சபையை நிறுத்திவைத்தனர்.

பின் செய்தி.

4-30 மணியளவில், டிப்பன் வைத்தியசாலையிலே அதிதீவிர பாரிசவாத நோயினால் அவர் மரணமாயினர். இவர் சட்டமகாசபை அங்கத்தவரன்றியும் கூட்டுறவு இந்திய பிரசார நிலையம் (Associated Press of India) என்பதின் தாபகரும் பத்திரிகாசிரியர்களுக்கெல்லாம் சிரேஷ்டரும் பெரியாருமாயுள்ளவர்.

வித்தியா விநோத விவேகம்.

இடமின்மையால் விடப்பட்டது.

இந்தியரா யாழ்ப்பாணத்தவரா தமிழ் மொழியில் வன்மையர்.

:•:

இந்துசாதனப் பத்திராதிபர் அவர்கட்கு:
ஐயா,

மேற்குறித்த மகுடமத்தைக்கொண்ட சாரமாகத் தங்களது இரண்டு பத்திரிகைகளில் தர்க்கமுறையாகத் தங்கள் ஊர் [illegible] ஆசிரியர் பிரமஸ்ரீ [illegible] சாஸ்திரிகளாலும் எழுதப்பட்டிருந்ததை வாசித்தேன். இதற்கு யான் குறிப்பிடுவது கல்விக்கடலாகவிளங்கும் மேதாவிகளின் நடுவே எம்போலியர் பிரவேசிக்கப் பத்திப்படாவிடினும் அறிவாலாயினும் பிரவேசிக்கிறேன். ஓர் இந்தியனையும் நாட்டுப்புறத்துக் கல்லாதவனாயினும் ஓர் யாழ்ப்பாணத்தவனையும் ஒருவிடத்தில் நிறுத்தி அவ்விருவருக்கும் நடுவாக ஒருவர் நின்று தமிழக்கரங்களைத் திறம்பாது உச்சரிக்கும்படி பின்வருஞ் சொற்களை உச்சரிக்கச்சொல்லிப்பார்த்தால் யாழ்ப்பாணத்தானா இந்தியனா தமிழன், தமிழ்மொழிவன்மை யுள்ளவனென இலகுவில் விளங்கிக்கொள்ளலாம். இதற்குப்பத்திரிகைகளில் எழுதி ஆராய்ச்சிபண்ண அவசியமில்லையே

திருமால், மருகன், குமரன், முருகன்,: திறமால், மறகன், குமறன், முறகன் இச்சொற்களை யாழ்ப்பாணத்தமிழன் இருவகையாகவு; இந்தியத்தமிழன் ஒரேவகையாகவுஞ் சொல்லிக்கொள்வது யாவருமறிந்த உண்மை. இனி வீட்டுக்கூரையைச் சுட்டி இது என்னவென்றால் கூறையென்றும் பெண்களுக்கு மணக்கோலத்தி லுடுத்துவது என்னவென்றால் அதையும் கூறையென்றே இந்தியர் சொல்வதையாவருமறிந்திருக்கிறோம். இப்படி அநேக அக்கரங்களைத் தவறிப்பேசுவது இந்தியராகும். வாக்குவன்மை யில்லாத கல்லாத யாழ்ப்பாணத்தானுக்கு இவ்விதஞ் சொல்லு என்று எதைச்சொல்லிக்கொடுத்தாலும் அவன் தமிழக்கரங்களை மருது அதைச் சொல்வான். இவைகளால் யாழ்ப்பாணத்தவர்கள் தமிழ், இயற்கையாகத் தமிழக்கரங்களை வழுவாத தமிழாகும். இறக்கு என்ற சொல்லுக்குப்பொருள் கேட்டால் அது [illegible] சொல்லென்று [illegible] இறக்கு என்றே சொல்லுவார்கள். இதற்குச்சாஸ்திரியாரவர்கள் இந்தப் பத்திரிகைக் கெழுதி நம்யாழ்ப்பாணத்தமிழை ஆராய வேண்டியதில்லையே. இங்ஙனம்

ஓர்பாஷாபிமானி, வதிரி.

விளம்பரம்.

கீழேகுறிக்கப்பட்ட மரங்கள் பிரசித்த ஏலத்தில் யாழ்ப்பாணம்உதவிவனபரிபாலனரவர்களால் 1931-ம் ஆண்டு புரட்டாதிமாதம் 15-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 30 மணிக்கு விற்கப்படும்:—

Lot. I. 100 பாலைமரங்கள்
Lot. II. 15 முதிரைமரங்கள்

ஏனைய விபரங்கள் 1931ஆ ஆவணிமீ 28-ந் திகதியையுடைய கவர்ன்மேந்து கசற் பத்திரிகையிற் கண்டுகொள்ளலாம்.

J. D. SARGENT,
வனபரிபாலனர்.

வனபரிபாலனர்கந்தோர்,
கண்டி, 4-9-1931.
G. 104 10.

நமது "தெய்வங்கள்."

பிரான்சுக்குக் கப்பல் ஏறுகின்றன.

கும்பகோணம் சிதம்பரம் முதலிய இடங்களில் ஆறு மாதத்திற்குமுன் விக்கிரகங்களைக் களவாடிய மூவரைக் கைது செய்திருப்பதாக வதந்தி. அது சம்பந்தமாக மற்றும் ஒருவரைச் சில தினங்களுக்குமுன் கும்பகோணத்தில் கைதி செய்து புலன் விசாரிக்கையில், வல்லம் மன் கோவில் வீதி 83-ம் நெ. கட்டிடத்திலிருந்த அப்துல் சபூர் என்பவர் புதுவையில் இருக்கின்றார். அன்னவரிடம் விற்கிரயத்திற்கு அநேக சிலைகளைக் கொடுத்திருப்பதாக சொன்னாராம். அது சம்பந்தமாகத் திருக்கோவிலூர்ச் சப் இன்ஸ்பெக்டரும் கூடலூர் இன்ஸ்பெக்டரும், புதுவை இன்ஸ்பெக்டர் சர்பூர முதலியார் முயற்சியின் பேரில், புதுவையிலுள்ள போலீஸ் ராமசாமி என்பவர் மூலமாகப் புலன் விசாரித்த அப்துல் சபூர் வீட்டை 27-8-31-ல் பரிசோதனை செய்ததில் சிதம்பரம் கோவில் விக்கிரகமாகிய நடராஜ மூர்த்தி 1. அம்மன் 2. சுவாமி 1. ஆக நான்கு விக்கிரகங்கள் அகப்பட்டன. சபூர் என்பவர் அகப்படவில்லை. புதுவையில் விக்கிரகங்கள் யாவும் போலீஸ் ஸ்டேஷனில் இருக்கின்றன.

புதுவையிலுள்ள வெள்ளையர்களில் அநேகர் சிலைகளை வாங்கி பிரஞ்சுதேசத்திற்கு அனுப்புகின்றார்கள். புதுச்சிலைகள் வாங்குவதில்லை. இங்கிருந்து பழமையான சிலைகளைக் கேஸ்வேலை அனுப்பும் தயிரேய் என்னும் வெள்ளையனை இவ்வளவு சிலை உமக்கு ஏது என்று பிரஞ்சு கவர்ன்மெண்டார் கேட்பது கிடையாது.

வேலூர்ப் பக்கத்திலிருந்தும் அநேக சிலைகள் திருட்டுத்தனமாகப் புதுவைக்கு வந்து சேருகின்றதாம். புதுவையிலிருந்து எந்தமார்க்கமாக வெள்ளிக்கேஸ் தீர்வையில்லாமல் எடுத்துப் போகின்றார்கள் என்று சிந்தனை செய்து கொண்டுதிரியும் அதிகாரிகள் இங்கிலீஸ் இலாகாவிலுள்ள நமது 'கடவுள்'களைத் திருடி பிரஞ்சு இந்தியாவாகிய புதுவையில் கப்பலில் ஏற்றும் திருடர்களை ஏன் பிடிக்க முயலவில்லை? என்று இந்தியாவில் புதுவை நிருபர் எழுதுகிறார்.

லோகோபகாரி.

இன் சொல்.

இன்சொல், அகமும் முகமும் குளிர்ந்துவிடத்து மனமகிழ்ச்சியோடு வெளிவந் தலாவிடப்படுவதால் மகிழ்விக்கும். அது பிறர் எவ்வளவு அகத்தி வாழ்ந்திருந்தாலும் அவர்களை உடனே இன்புறச் செய்யும். இன்சொற்களைக் குற்றவறக் கூறுபவனுக்குத் துன்பமென்னுங் கனியம் சேராதொழியும். இன்சொற்களைக் கூறுபவன் எப்பொழுதுஞ் சந்தோஷமாகவே யிருப்பான். இன்சொல் தன்னை அந்தன்னானுக்குப் பெருமையை யுண்டாக்கும்; மகவினதனைச் சேர்க்கும். பூராதனடாட்சம் உண்டாக்கும் வறுமையைப் போக்கும் வன்சொற்களையும் துர்வார்த்தைகளையும் தடுக்கும் இன்சொல்லே யாவற்றிற்கும் முதன்மையான வடனிதம்.

> "இன்சொல்விளைநிலனா வீதலேவித்தாக
> வன்சொற்களைகட்டுவாய்மைஎருவட்டி
> அன்புநீர்பாய்ச்சி அறக்கதிரீன்றதோர்
> பைங்கூழ் சிறுகாலைச்செய்"

என்னுஞ் செய்யுள் இங்கு கவனிக்கத் தக்கது. சிலர் இன்சொற்களைப் புகன்றால் கௌரவங் குறையுமென்றோ, திரவியம் அழியுமென்றோ, அல்லது புகழ் இவை என் வேண்டுமென்பதினாலோ, பாவம் வந்து தடுப்பதினாலோ புலமொழிகின்றனர். வேறு சிலர் நாங்கள் என்ன வினைகளோ, வேலையற்றவர்களோ என்று கவிவார்கின்றனர். நாம் இன்சொற்களைக் கூறுவதால் என்ன பயனடையப்போகிறோம் என்று கேட்கா நிற்கின்றனர். மற்றுஞ் சிலர், இவ்விதமாக இவர்கள் பதபவவிதமாக நாணங் [illegible] மனை செருக்கொடு வன்சொற்களைக் கம் முகிருடன் பிறந்தவையென்று சொல்வதற்கிணையாக வழங்குகின்றனர். வேறுசிலர் "கடுஞ்சொல் நாட்டஞ் செய்குவது வன்சொலாற் கனிகொண்டழைத்தனன்று" என்னும் அமுதமொழியை மறந்து வாளாவிருக்கின்றனர்.

உலகத்திலுள்ளோர் யாவரும் இன்சொலைக் கேட்டு மகிழ்வார்கள்; வன்சொலைக் கேட்டு இகழ்வார்கள்.

> "இன்சொலாலன்றி இருநீர்வியனுலகம்
> வன்சொலாலென்றும் மகிழாதே-பொன்செய்
> அதிர்வளையாய் பொங்கா தழற்கதிரால் தண்ணென்
> கதிரவனாற் பொங்குங்கடல்"
>
> (நன்னெறி)

> "மென்மதுர வார்த்தையால் விரும்புஞ் சகத்தினை
> வன்மொழியினால் இகழு மண்ணுலகம்-நன்மொ
> ழியை, யோதுகுயி லேதங் குதவியது கர்த்தபந்
> தான், ஏதபராதஞ்செய்ததின்று."
>
> (நீதிவெண்பா)

என்றும் பெரியார்கள் மொழிந்துள்ளார்கள்.

சாரதாவதாரமென்று சொல்லாநின்ற தேவார முதலாக்குடைய ஞானப்பிராட்டியாரும் "குழம்பட வுரை" "கடிவது மற" "கீழ்மையினுந் தாழ்வுரை" "வெட்டெனப் பேசேல்" என்று திருவாய்மலர்ந்தருளியுள்ளார்கள், நாம் அவைகளை நன்றாகக் கற்று அதன்படி நடந்தொழுகுவதற்கே. இம்மைப்பயன்களாகிய அறம், பொருள், இன்பம் மூன்றனுள் அறம் எங்குள்ளதென்று நினைப்பின்

> "அகத்தானமர்ந் தினிதுநோக்கி முகத்தானாம்
> இன்சொ லினிதே யறம்"

என்றபடி பொய்யாமொழிப் புலவர் இன்சொற் கூறுவதே முதலாவது அறமென்று கவின்றனர். நம்மிடம் இன்சொல், வன்சொல், புன்சொல், பனிற்சொல் என நான்குவகைச் சொற்களும் நிறைந்துள்ளன. ஒரு மரத்தில் இனிமையான பழங்கள், காய்கள், வெம்பிப்போன பிஞ்சுகள், பழுதுபட்ட காய்கள் என்றிங்ஙன் குவிந்துள்ளது. நாம் அவற்றில் எந்தப் பழங்களில் சாதாரணமாக இச்சைவைப்போம். இனிமையான பழங்களிற்றான். ஆகவே அதுபோல நம்மிடமுள்ள நான்குவிதச் சொற்களுள் இன்சொற்களையே வழங்கல்வேண்டும். இதைநோக்கியே,

> 'கலையறிதெளிஞ ரின்சொலினுங் கூர்தல்
> ஓகோ கொடிது கொடிதம்மா-நாகொன்று
> தீவினைக்கும்மியனுல் வாய்பூட்டிடப்படின்
> மற்றவா விவரே செய்வார்'
>
> நீதிநெறிவிளக்கம்.

நாம் பிறர்மேற் குற்றங்கூறும் பொழுது மனத்தைக் கொடுப்பது அறிவெனினும் இன்சொல்லேனுஞ் சொல்லாமலிருப்பது ஓகோ! கொடிது! கொடிது!! பாவமானது இவர்கள் நாவை அறுத்து வாயையும் பூட்டுப்போட்டுவிட்டதுபோலும். ஐயோ! பாவம் என்று பெரியோர் பரிவுறுதற்கு இடமுண்டாகும். இறைவனருள் புரிக. இன்சொல்லே வழங்குவீர்களாக.

ஆசிரியன் - க. இராசையா,
கணேச வித்தியாசாலை.

ஒப்பந்தப்படி அரசாங்கத்தார் நடந்துகொண்டனரா?

—:*+*:—

காந்தியடிகளின் குற்றப் பத்திரிகை.

(முற்றொடர்.)

வடமேற்கு எல்லைப்புற மாகாணம்.

29. மால்கண்ட் ஏஜன்சி சிறையில் காப்பில் வைக்கப்பட்டிருந்த சிலரைப்பார்த்து 'மால்கண்ட் தாசில்தார்கள்' குதாய் கித்மத் கார்களை (தொண்டர்களை)ச் சுட்டுக்கொல்லச் சம்மதப்பட்டால் நீங்கள் விடுதலை செய்யப்படுவீர்கள் என்று கூறினர். மேற்படி தொண்டர்களில் எத்தனை பேரைப் பிடிக்க முடியுமோ அத்தனை பேரைப் பிடித்து அவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் இருநூறு ரூபாய்வீதம் பணம் வாங்கிக்கொண்டு விடுதலை செய்வதாயிருந்தால் நீங்கள் விடுதலை செய்யப்படுவீர்கள் என்றும் கூறினர். சாத்ருன் என்ற கிராமத்தில் ஒரு குதாய் கித்மத்கார் குத்தப்பட்டார். 4-7-31 இரவு சோஸ்டன் என்ற ஊரில் மற்றொரு தொண்டர் சந்தேகப்படும்படியான நிலைமையில் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

30. படகிராமத்தைச் சேர்ந்த அப்துல்லா ஜான் ஜெயில்தார் என்பார், எல்லைப்புற கான்ஸ்டேபிள்களின் துணைகொண்டு, நிலத்தீர்வை செலுத்தாத எல்லாத் தொண்டர்களையும் ஒன்று கூட்டினர். இவர்களில் ஆறு பேரைக் குளவிகள் நிரம்பிய ஓர் அறையில் அடைத்து அவ்வறையில் புகை போட்டுவிட்டார். இதனால் குளவிகள் கூண்டுகளிலிருந்து வெளிவந்து இவர்களைக் கடித்தன. இவர்கள் அறையினின்று வெளியில் அழைத்துவரப்பட்டபோது, இவர்களுடைய முகங்களெல்லாம் வீங்கியும் சிவந்தும் போயிருந்தன. பிறகு, 'உங்கள் மனைவிமார்களை விற்று கிஸ்தியைச் செலுத்துங்கள்' என்று அப்துல்லா ஜானின் மகன் கூறினர்.

31. மேற்படி அப்துல்லா ஜான் என்பார், கோரபலீக் என்ற கிராமத்தில் 27-6-31ல் நிலத்தீர்வை செலுத்த முடியாத குதாய் கித்மத்கார்களையெல்லாம் ஒன்று கூட்டி, அவர்களுடைய கைகளைப் பின்புறமாக இறுகக் கட்டிவிட்டு, நல்ல வெயிலில் உட்கார வைக்கப்பட்டார்கள். யாரேனும் வாய்திறந்து ஒரு வார்த்தை கூறினால் அவர்கள் துப்பாக்கியின் பின்பாகத்தால் பலமாகத் தாக்கப்பட்டார்கள். இதன் பயனாக ஒரு வயோதிகர் மூர்ச்சையாகிவிட்டார். இந்த மாதிரி ஐங்டோவிலும் பாகாயானுவிலும் நடைபெற்றிருக்கின்றன.

32. ஷாப் காதர் என்ற இடத்தில், அல்மீர், ஷமீத்கான் என்ற இருவர் - இவர்களுக்கு அரசாங்க ஜாகீர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன— இரண்டு குதாய் கித்மத்கார்களை அழைத்துச் சென்று, அல் ஆரிஜுன் என்ற அரசியல் உத்தியோகஸ்தர் முன்னிலையில் நிறுத்தினர். அவர், காங்கிரஸ் வேலையை விட்டுவிடும்படி இவர்களுக்குக் கூறினர். அது செய்ய இவர்கள் மறுத்தனர். எனவே நிர்வாணமாக்கப்பட்டு நன்றாக அடிக்கப்பட்டனர். ஒருவர் நல்ல வெயிலில் குப்புறப் படுத்துக்கொள்ளும்படி செய்யப்பட்டு அப்படியே அவர் இறக்குமாறு செய்யக் கயிற்றால் நன்றாகக் கட்டப்பட்டார். பின்னர், அவருடைய ஆசனவாயில் கம்புகளை ஏற்றச் சொருகினர்.

33. 21-6-31ல் சார்பக் என்ற கிராமத்திற்கு மகாப்கான் என்ற ஒருவரைக் கைது செய்ய ஒரு போலீஸ் படை சென்றது. இவர் சிலரை, சட்ட விரோதமாகக் காப்பில் வைத்துத் தொந்தரவு செய்தாரென்று குற்றஞ்சாட்டப்பட்டார். இதில் குல்சான்என்பாரை வாதியாகப் போலீசார் நிறுத்தினைத்தனர். போலீஸார் மேற்படி சார்பக்குச் சென்று லம்பர்தார் போன்ற எந்த உத்தியோகஸ்தரும் ஆஜராக இல்லாமையில் விசாரணையிலேயே, அவருடைய வீட்டில் நுழைந்து பரிசோதித்து 200 ரூபாயை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டனர். அன்று மாலை, பஸ்லூர் ரஹிமான் என்ற ஒரு குதாய் கித்மத்கார் கைது செய்யப்பட்டார். அப்பொழுது ஒரு ஜனக்கூட்டம் சகா என்ற இடத்தில் கூடியது. போலீசார், துப்பாக்கிப் பின் முனையால் அதைப் பலாத்காரமாகக் கலைத்தனர். 22-6-31ல் மகாப்கான், தாமே போலீசில் சரண்புகுந்தார். அன்று மாலையே ஜில்லா போலீஸ் சுப்பிரண்டெண்ட் முன்னிலையில் சையத் அஷ்பக்கான் என்பாரும், அரபாப் அப்துல் கபூர்கான் என்பாரும், மகாப்கான் எவ்வித குற்றமும் செய்யவில்லையென்று வாக்கு மூலம் கொடுத்தனர். ஆனால் 24-6-31ல் மேற்படி சையத் அஷ்பக்கானும் அரபாப் அப்துல் கபூர்கானும் இ. பி. கோ. 143/225 பிரிவுகளின்படி கைது செய்யப்பட்டனர்.

34. கோஹத் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தமது தொண்டர்களுடன் ஹங்கு பிரதேசத்தில் சுற்றுப்பிரயாணஞ் செய்துகொண்டிருந்தபோது, போலீசார், ஷின்வாரி என்ற இடத்தில் அவரை நிறுத்தி அவர்மீது துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர். ஆனால் குறி தப்பிவிட்டது. ஆனால் இவர் திரும்பி வந்துகொண்டிருந்தபோது, பரிகாசம் செய்யப்பட்டார்; கல்லால் அடிக்கப்பட்டார்; கடைசியில் தடியால் அடிக்கப்பட்டார்.

35. கான் அப்துல் கபூர்கான் அவர்களால் வெளியிடப்படும் 'பாக்தான்' என்ற புஷ்டு பாஷைப் பத்திரிகை, சமூக சீர்திருத்தத்தை உத்தேசித்தே வெளியிடப் படுகிறதாயினும், அதன் மே மாதத்துச் சஞ்சிகை, தபால் அதிகாரிகளால் நிறுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு எவ்வித காரணமும் கூறப்படவில்லை.

36. கலீல், மொஹம்மத்சூ, ஆகிய இலாகாக்களிலும், பெஷாவர் தாசிலிலும் எவ்விதப் பொதுக் கூட்டங்களும் நடைபெறக்கூடாதென்று 144-வது பிரிவு பிரயோகிக்கப்பட்டிருக்கிறது.

"நவசக்தி"

திறம் கொளுக்கி ஓடுகள்.

மோர்கன், நட்சத்திரம் 14, இஞ்சுப் பக்கா ஓடு முதலியன அடைமழைக்குங்கசியா. அண்டப் பார்த்தாப் போலக் கூரையில் அடுக்கலாம். பாரங்குறைவு, பெலனதிகம்; நல்ல அழுத்தமான இந்த ஓடுகள் 125 போட்டால், மற்ற ஓடுகள் 150 போடுகிற இடத்தை மூடும்.

விற்கும் இடங்கள்:—

யாழ்ப்பாணம்:—
மு. இராசேந்திரமப்பர்
கிட்டங்கித்தெரு.

பரித்தித்துறை:—
மு. நமசிவாயம்
கடைத்தெரு.

ஊர்காவற்றுறை:—
கரம்பன்.

திருக்கோணமலை:—S. சின்னையா
வில் லூண்டி.

(H 12. 10-1-32)

நல்லசெடிகள் புதிய விதைகள்.

மூன்று வயதுள்ள பெயர்பெற்ற ஒட்டுமாங்கன்று, எலுமிச்சை, சீமை அத்தி, பொம்ளிமாஸ், கொய்யா, மாதுளை முதலிய பழச்செடிகளும், முதல்தரமான குரோட்டன் ரோஜா செடிகளும் விற்பனைக்குத்தயாராயிருக்கின்றன.

விதைகள்:—நாட்டுச்காய்கறி 20 பாக்கெட் 2-50 சீமைக்காய்கறி புஷ்பவிதைகள் 20க்கு ரூபா 2 ஷை 10க்கு 1-25. 1930-31 வருஷத்திய படங்களுடன் அச்சிட்ட காட்லாக் இனும்.

ச. கே. இ. காதர்மீரா சாய்பு,
ஹெட் கர்சரிதோட்டம், சேலம்,
(Y. 13 26-2—25-2-32) (இந்தியா.)

உயர்தரமான தமிழ் நூல்கள்!

(1) தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு மெய்கண்ட விருத்தியுரையுடன் ரூ. 4 (2) பட்டினத்துப்பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய பிரபந்தத்திரட்டின் விருத்தியுரை ரூ 3½. (3) திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், தெளிபொருள் விளக்கப் பதவுரையும், விசேஷக்குறிப்புகளுடன் ரூ 4 (4) விநோதரசமஞ்சரி ரூ. 2 (5) அராபிக்கதை ரூ 2½. (6) பழமொழிவசாதி ரூ 3. (7) ஆத்திசூடிபுராணம் ரூ. 2. (8) கல்லாடம் மூலமும் உரையும் ரூ. 3. (9) நாலடியார் ரூ. 2. (10) நைடதம் மூலமும் விருத்தியுரையும் ரூ 4. (11) ராமகிருஷ்ணபரமஹம்ஸர் விரிவான சரித்திரம் ரூ. 3.

தமிழ்புத்தககியாட்லாக்
இனும்
ஒற்றுமை ஆபீஸ்.
2. சைதாப்பேட்டை, மதருஸ்.

ஒற்றுமை ஆபீஸ், சைதாப்பேட்டை, மதராஸ்.

(Y 7 7-9—8-9-32)

The Prudential Assurance Co., Ltd.

புறுடென்ஷல் வீமா கொபனி.

1930-ம் ஆண்டின் கணக்கால்

ஆதாய நன்கொடை.

வீமாத்தீர்ந்த ஒவ்வொரு 1000ரூபாவுக்கும் பூரண ஆயுள் வீமாக்களுக்கு (Whole Life Policies) ரூபா 26/- வீதமும், தவணை குறித்த வீமாக்களுக்கு (Endowment Policies) ரூபா 23/- வீதமும் கொடுக்கப்படும்.

ஒவ்வொரு வருஷமும் இத்தகைய பெரும் தொகையான ஆதாய நன்கொடைகளைக் கொடுக்கக்கூடியதும் பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தில் மிகப் பெரியதுமான இக்கொம்பனியில் 2,61,00,000 பேர்கள் உரித்தாளராய்ச் சேர்ந்திருந்து மேற்கூறிய ஆதாயங்களில் பங்குபற்றிவருகிறார்கள். தாமும் அவர்களுடன் சேர்ந்து ஆதாயம் அடையவிரும்பின் விபரங்களுக்கு உடனே எழுதவும்.

டெல்மீஜ் போர்சைத் அன்ட் கோ., லிமிட்டட்.
பிரதான ஏஜண்டுகள், கொழும்பு.

Principal Agents in Ceylon, Delmege Forsyth & Co. Ltd, Colombo.
(Y. 11. 19 to 31-12-31) வீ

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by S ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna.